In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஶிவமயம்

க்ரியா க்ரம த்யோதிகா

எனும்

ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி

பவித்ரவிதி

(தமிழ் விளக்கங்களுடன்)

ஸ்ரீ காளஹஸ்தீஸ்வரர்

ஸ்ரீ ஞானாம்பிகை

"தத்புருஷஶிவ" "ப்ரதிஷ்டா பூபதி"

ஶிவஸ்ரீ T.K. பாலமணி சிவாசார்யார் - ஸ்ரீமதீ பா.விஜயலக்ஷ்மீ

தம்பதிகள்

ஷஷ்ட்யப்த பூர்த்தி ஶாந்தி - விழா மலர்

14-8-2010

ஞானாம்பிகா வேதஶிவாகம பாடசாலை

திருக்கண்ணங்குடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்ரைகள்

தால முத்ரை


மஹா முத்ரை

அங்குஶ (ஸ்ருணி) முத்ரை


சோடிகா முத்ரை


முத்ரா-பந்தம் முத்ரா-ப்ரயோகம்

தேனு முத்ரை


விஸ்புர முத்ரை

பிம்பமுத்ரை

பத்ம முத்ரை

கோ-விஷாண முத்ரை

த்ராஸநீ முத்ரை

நமஸ்கார முத்ரை

ஸம்ஹாரிணீ முத்ரை

அப்யுக்ஷண முத்ரை


ஆவாஹன முத்ரை

ஸ்தாபன முத்ரை

உ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரஹ்மஸ்ரீ. கந்தஸ்வாமி சிவாசார்யார்
அவர்களுக்கு
அனேக நமஸ்காரங்கள்.

ப்ரஹ்மஸ்ரீ. வேதஞான குருக்கள்.
S. Annasundaram
15/8/2010

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
ஶிவமயம்

க்ரியா க்ரம த்யோதிகா
எனும்

ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி
பவித்ரவிதி
(தமிழ் விளக்கங்களுடன்)

விளக்கங்கள்
"அகோர ஶிவாசார்ய"
ப்ரஹ்மஶ்ரீ. **ஸே. அருண ஸுந்தர குருக்கள்**
வ்யாகரணப் பேராசிரியர்
சென்னை ஸம்ஸ்கிருதக் கல்லூரி, சென்னை

''தத்புருஷஶிவ'' ''ப்ரதிஷ்டா பூபதி''
ஶிவஶ்ரீ T.K. பாலமணி சிவாசார்யார் - ஸ்ரீமதீ பா. விஜயலக்ஷ்மீ
தம்பதிகள்

ஷஷ்ட்யப்த பூர்த்தி ஶாந்தி - விழா மலர்

14.8.2010

ஞானாம்பிகா வேதஶிவாகம பாடசாலை
திருக்கண்ணங்குடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விளக்கக் குறிப்பு

பெயர்	-	க்ரியாக்ரம த்யோதிகா எனும் ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி
பொருள்	-	பவித்ரவிதி
ஆசிரியர்	-	ஸ்ரீமத் அகோர ஶிவாசார்யார் (ஶாலிவாஹன ஶகாப்தம்- 1080, கி.பி-1158)
மூலம்	-	ஸ்ரீமத் அகோரசிவாசார்ய பத்ததி ஸ்ரீமத் அம்பலவ நாவல ஜ்ஞானஸம்பந்த பராஶக்தி ஸ்வாமிகள் வெளியீடு, 1927.
விளக்கங்கள் பதிப்பு	-	ப்ரஹ்மஸ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள், சென்னை.
மொழி	-	ஸம்ஸ்க்ருதம், தமிழ்.
எழுத்து	-	க்ரந்தம், தமிழ்
எழுத்து அளவு	-	12 புள்ளிகள்
அளவு	-	1 x 8 டெம்மி
தாள்	-	மேப்லித்தோ
பக்கங்கள்	-	96
ப்ரதிகள்	-	1000
விலை	-	
வடிவமைப்பு	-	சிவஸ்ரீ.க.கார்திகேய ஶிவம், திருப்பரங்குன்றம், ஸ்ரீ. பா. கணபதி ஸுப்ரஹ்மண்யம், சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரி, சென்னை.
அச்சிடல்	-	ஸ்ரீ ஹரீஷ் ப்ரிண்டர்ஸ், சென்னை
வெளியீடு	-	ஸ்ரீ ஞானாம்பிகா வேதஶிவாகம பாடஶாலை திருக்கண்ணங்குடி 14.8.2010

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாலமணி எனும் சிந்தாமணி

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான் வாயாரத் தன்னடியே
பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர் தம் சிரத்தின் மேலான் ஏழ் அண்டத்து
அப்பாலான் இப்பால் செம்பொன்,
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதின் உள்ளான் பொருப்பிடையான்
நெருப்பிடையான் காற்றின் உள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்து உச்சியுள்ளான் காளத்தியான் அவனென்
கண் உளானே!

—திருநாவுக்கரசர் - திருத்தாண்டகம்

''சிந்தாமணி: இவ ப்ராஜி ஏகதா பஹுதா திசேத்'' என்கிறது காமிகாகமம். சிந்தாமணி எனும் ரத்தினம் தானும் ப்ரகாசித்து பிறவற்றையும் ப்ரகாசிக்கச் செய்யும் ஆற்றல் உடையது. எண்ணியதையெல்லாம் தரவல்லது. ஞானப் பூங்கோதை உடனாய காளத்திநாதனை ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாகக் கொண்டு வழிவழி பூஜித்து வரும் சிவாசார்ய குடும்பத்தில் தோன்றியருளிய திருக்கண்ணங்குடி சிவஸ்ரீ **T.K. பாலமணி சிவாசாரியாரும்** சிந்தாமணிக்கு ஒப்பானவர்.

திருநாகைக்காரோணம் தலத்தின் (நாகப்பட்டினம்) அருகில் இலுப்பூர் எனும் கிராமத்தில் நாகைக்காயாரோகணப் பெருமானின் திருநாமத்தையே தமதாகக் கொண்டிருந்த சிவஸ்ரீ காயாரோகண சிவாசாரியார் திருமதி ஜயலக்ஷ்மி தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வராய் உதித்தவர் பாலமணி எனும் சுப்ரமண்யம். இளம் வயதில் பள்ளிப் படிப்புடன் வேதாகம பாடங்களையும் அவர்தம் தந்தையாரிடத்திலேயே கற்க விரும்பினார். தனயனின் பரிபக்குவமறிந்த தந்தையாரும் கர்ப்பாஷ்டமம் எனப்படும் ஏழுவயதில் சிறுவன் பாலமணிக்கு உபநயனமும் சமய தீட்சையும் செய்வித்து மகிழ்ந்தார். இறையருளால் 'தத்புருஷ சிவம்' எனும் தீட்சா நாமம் சூட்டப்பெற்று வேதாகம ஆரம்பக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டது.

தென்கயிலாயம் எனப் புகழ்பெற்ற திருவையாறு திருத்தலத்தில் ஐயாரப்பரின் திருநாமத்தையே கொண்டு சகலாகம பண்டிதராய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த சிவஸ்ரீ பஞ்சாபகேச சிவாசாரியாரிடத்தில் சிவாகமங்களின் நுண்பொருள் உபதேசம் பெற்று தம் புதல்வன் வளர வேண்டும் என விருப்பம் கொண்டார் இலுப்பூர் சிவஸ்ரீ காயாரோகண சிவாசாரியார்.

குருவிற்கேற்ற சீடனும், சீடனுக்கேற்ற குருவும் அமைவது ஈஸ்வரன் திருவுள்ளமே. பண்பும் ஒழுக்கமும் நிறைந்த பாலமணி தமது சீடராக அமைந்ததை மகிழ்ந்து சிவபெருமானுடைய திருவருளை வியந்து போற்றிய சிவஸ்ரீ பஞ்சாபகேச சிவாசாரியார் தமது குமாரர் சுப்ரமணியத்தையும் இணைத்து இரு கண்மணிகளுக்கும் வேதசிவாகம உபதேசங்களைச் செய்வித்தருளினார். குருகுலவாசமாக பல ஆண்டுகள் திருவையாற்றிலேயே இருந்து பயின்றதில் சிவாகமங்களின் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களிலும் தேர்ச்சி பெற்றும், வேதத்தில் சப்த காண்டங்கள் எனும் முழுமையான ஞானமும் பெற்று வைதீகக்ரியைகளிலும் (பூர்வம்-அபரம்) ஆலய நித்யநைமித்திக காம்ய பூஜைகளிலும், கும்பாபிஷேகக் கிரியைகளிலும் வல்லவராகி நின்ற பாலமணி 'வேத ரத்னம்' 'ப்ரதிஷ்டா பூபதி' 'சிவாகம வித்வான்' போன்ற விருதுகளுடன் இளம் வயதிலேயே புகழ் பெறத் துவங்கினார். மேலும் வடமொழி இலக்கண இலக்கியங்களையும் கற்றறிந்தவர், திருமுறைகளைப் பண்ணோடு இசைக்கும் ஆற்றல் பெற்றவர்.

இது சமயத்தில் இலுப்பூரில் வசித்து வந்த சிவஸ்ரீ காயாரோகண சிவாசாரியார் அருகில் உள்ள திருக்கண்ணங்குடி எனும் திருத்தலத்திற்குக் குடிபெயர்ந்தார். திருவையாற்றில் பயின்று முடித்து பல விருதுகளுடன் திருக்கண்ணங்குடி வந்த பாலமணி அவரது பெற்றோர்களின் விருப்பத்திற்கிணங்கி சௌபாக்யவதி விஜயலக்ஷ்மியின் கைத்தலம் பற்றினார். சிறுவன் பாலமணி ''ப்ரதிஷ்டா பூபதி - திருக்கண்ணங்குடி - சிவஸ்ரீ T.K. பாலமணி சிவாசாரியார்'' என நம் எல்லோராலும் பக்தியோடு உச்சரிக்கும் பெயர் பெறலானார்.

திருக்கண்ணங்குடி சிவஸ்ரீ T.K. பாலமணி சிவாசாரியார் சௌ. விஜயலக்ஷ்மி தம்பதிகள் காதன்மையோடு இல்லற தர்மம் காத்து வரும் காலத்தில் சிவபெருமானுடைய சக்திகளாகிய இச்சை, கிரியை, ஞானம் எனும் வடிவில் சௌ. இந்திரா, சௌ. நீலா, சௌ. சங்கரி எனும் மூன்று குமாரத்திகளையும், ஒரு புதல்வனையும் ஈன்று அவர்களின் வம்சம் தழைக்கச் செய்தனர். அருந்தவப் புதல்வனாகிய அவர்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குமாரனுக்கு பரம்பரை பரம்பரையாக ஆன்மார்த்த பூஜா மூர்த்தியாகக் கொண்டிருக்கும் அருள்மிகு காளத்திநாதனுடைய திருநாமத்தைக் கொண்டு காளஹஸ்தீஸ்வரன் என்று பெயர்சூட்டி மகிழ்ந்தனர்.

தமிழகத்தின் புகழ்பெற்ற திருத்தலங்களாகிய திருநாகைக் காரோணம், சிக்கல் சிங்கார வேலர், கடலூர் பாடலீஸ்வரர், கல்கத்தா மற்றும் சிங்கப்பூர், மொரீஷியஸ், ரீ-யுனியன் போன்ற அயல் நாடுகளிலும், எண்ணிலடங்கா திருக்கோயில்களுக்கு, சர்வ சாதகராய் இருந்து கும்பாபிஷேகத்தினை சிவாகம முறை வழுவாது செய்வித்தருளியிருக்கிறார். எளியேன் சிங்கப்பூர் சிவன் கோயில் கும்பாபிஷேகம், சீர்காழி ஸ்ரீப்ரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் போன்றவற்றை ஏற்று நடத்திய போது எனக்கு உடனாய் இருந்து அவர் ஆற்றிய அரும்பணிகள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூறத்தக்கதாகும்.

அவர்தம் குமாரன் சிரஞ்சீவி கணேஷ் என்கிற காளஹஸ் தீஸ்வரனையும் சிவவேதியர் குல மரபுப்படி வேதாகமங்களில் வல்லுனராக்கியிருப்பது மரபு காத்த பெருமை பெற்ற செயலாகும். தமது ஆன்மார்த்த மூர்த்தியின் சக்தியாகிய ஸ்ரீ ஞானாம்பிகை திருநாமத்தில் வேதசிவாகம பாடசாலையை குருகுலவாச முறைப்படி நடத்தி வரும் சிவஸ்ரீ பாலமணி சிவாசாரியாரிடத்தில் பயின்றுள்ள சிவாசாரிய மாணவர்கள் பலர் சிவாகமம்வல்ல சர்வ சாதகர்களாக இன்று ப்ரகாசிக்கின்றனர். திருப்பந்துறை சுரேஷ் என்றழைக்கப்படும் சிவஸ்ரீ வெங்கடேச சிவாசாரியார் இதில் குறிப்பிடத் தக்கவராய் புகழ் பெற்றுள்ளது எல்லோரும் அறிந்ததே.

குலதர்மம் காப்பதில் சிறந்து விளங்கும் சிவஸ்ரீ பாலமணி சிவாசாரியார் தமது அருமைக் குழந்தைகளுக்கு உரிய காலத்தில் விவாஹம் செய்வித்து பேரன் பேத்திகள் பெற்று தமது அறுபது வயதினைப் பூர்த்தி செய்து மணிவிழா காண்கிறார் என்றால் சைவ உலகின் மெய்யன்பர்கள் அனைவருமே மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைவதில் வியப்பொன்றுமில்லை. எனது பெற்றோருக்கு மணிவிழா செய்வித்த - திருக்கண்ணன்குடி சிவஸ்ரீ T.K. பாலமணி சிவாசாரியார் சௌ. விஜயலக்ஷ்மி தம்பதிகளுக்கு ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் நடப்பதில் அவரது குடும்பத்தாருடனும், சீடர்களுடனும் இணைந்து பங்கு பெறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். அவர் கடந்து வந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதையை நம் சந்ததியினர் அறிந்து பயன்பெற வேண்டிய அவசியத்தை ஒட்டியே இதனை விரிவாக எழுதி அவரது திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

ஒரு நல்ல சீடராகப் பயின்று பட்டை தீட்டிய வைரமாகத் தாமும் ஜொலித்து பொது வாழ்க்கையில் அரும்பெரும் சிவத் தொண்டுகள் செய்து, நல்ல குடும்பத்தலைவராக விளங்கி, நல்ல குருநாதராக சீடர்களை உருவாக்கி என எல்லா நிலைகளிலும் பிறவற்றையும் பிரகாசிக்கச் செய்து வரும்

''பாலமணி ஒரு சிந்தாமணிதான்''

நமஸ்காரத்துடன்,

A.V. சுவாமிநாத சிவாசாரியார்

சிவபுரம் வேதசிவாகம பாடசாலை,
மயிலாடுதுறை.
01.08.2010

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாகம ஞானசாகரம், சாக்தரத்னம் கயிலைமாமணி
திருக்கோலக்கா **ந. இராமநாத சிவாச்சாரியார்**

ஆசியுரை

தோன்றிற் புகழோடு தோன்றுக என்று திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க ஆதிசைவகுல திலகமாக திகழ்ந்த சிவஸ்ரீ காயாரோஹண சிவாச்சாரியார் திருமதி. ஜெயலட்சுமி தம்பதியர்க்கு அருந்தவச் செல்வராக விக்ருதி வருட ஆனி ஹஸ்த நட்சத்திரத்தில் தோன்றிய சிவஸ்ரீ பாலமணி சிவாச்சாரியார் இளமையிற் உலகியல் கல்வியில் சிறந்து தேர்ச்சி பெற்றும், மஹாவித்வான் திருவையாறு. சிவஸ்ரீ பஞ்சாபகேச சிவாச்சாரியாரிடம் வேத சிவாகமங்களிலும் காவ்ய சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்று திருநறையூர் ஆசீர்வாதசரபம் சிவஸ்ரீ சுப்பிரமணிய சிவாச்சாரியார் குமாரர் சிவஸ்ரீ குஞ்சு சிவாச்சாரியார் குமாரி ஸௌபாக்யவதி விஜயலட்சுமியை மணந்து நன்மக்களைப் பெற்றும், சிவ தீட்சை ஆசார்யாபிஷேகம் பெற்று ஆத்மார்த்த பரார்த்த பூஜைகளை சிறப்பாக செய்து வருவதுடன் ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகங்களில் ஆசார்யராகவும். சாதகராகவும் சர்வசாதகராகவும் பல கும்பாபிஷேகம் செய்து வருவதுடன் பல வெளி நாடுகளிலும் நடக்கும் கும்பாபிஷேகங்களிலும் சர்வ சாதகராக இருந்து நடத்தி பலராலும் பாராட்டியும் பல விருதுகளையும் பெற்றும் உலகம் போற்றும் உத்தமராக இன்று தமது ஷஷ்டியப்தபூர்தி மணி விழாவை வேதசிவாகமோக்த முறைப்படி, பல ஆன்றோர்கள் சான்றோர்களின் முன்னிலையில் கொண்டாடுவதுடன், ஆலயங்களில் நித்ய நைமித்திக பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வர ஆகமங்கள் கூறுகின்ற பூஜைகளில் அறிந்தோ அறியாமலோ ஏதேனும் பிழைகள் ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்ய ஆண்டுக்கொருமுறை பவித்ரோத்ஸவம் செய்ய வேண்டுமென்பதை சிவாகமங்கள் கூறுகின்றன. பவித்ரோத்ஸவம் செய்யும் முறைகளைக்கூறும் பவித்ரோத்ஸவ விதி என்ற நூலானது தற்காலம் கிடைப்பது அரிதாகிவிட்டதால் அதை தமது மணி விழா மலராக வெளியிடுவது வருங்கால இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும். இதை பெற்று அதன்படி பவித்ரோத்ஸவம் செய்து சிவபெருமானருளால் நாடும் நாமும் சிறந்து விளங்கிட உதவி செய்யும் விழா தம்பதிகள் எண்பதும், ஶதாபிஷேகமும் பெற்று எல்லா நலன்களுடன் பல்லாண்டு வாழ்ந்து வர எமது உள்ளத்தில் உறையும் ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஶ்வராளை வேண்டி ஆசிகள் பல சொல்லி மகிழ்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகவுரை

பவித்ர பூதஸ்ய பவித்ர, தானம்
தாப - த்ரய - க்னம் ஸகலார்த்த - ஸித்யை
ஜபஶ்ச பக்த்யா ப்ரணதி: ஶிவஸ்ய
ப்ரஹ்மேந்த்ர - விஷ்ண்வாதி பதஸ்ய ஹேது:

- *ஶிவ பூஜா ஸ்தவ:*

அனாதி மல முக்தர் பரமேஶ்வரர். அதாவது ஸ்வபாவமாகவே, ஆணவ - மலத்தோடு தொடர்பற்றவர். ஸர்வஜ்ஞத்வம், ஸர்வ - கர்த்ருத்வம் போன்ற அனந்த குணங்களையுடையவர். அவர், பஶுக்களாகிய நம்மையும் தம்போன்றே அனுக்ரஹிக்க விரும்புகிறார். நம்மிடம் உள்ள ஒரு பெருங்குறை; ஸ்வபாவமாகவே ஆணவ மலத்தோடு தொடர்புகொண்டுள்ளதுதான். இந்த ஒரு தொடர்பு மட்டும் துண்டிக்கப்பட்டால், நமக்கும், ஸர்வஜ்ஞத்வம், ஸர்வ கர்த்ருத்வம் போன்ற குணங்கள் வெளிப்படும். இந்த நிலையைத்தான் ஶிவபெருமான் விரும்புகிறார். உலகில் வேறு எவரும் இது போல விரும்பமாட்டார். தம்மைவிடப் பிறர், பலவகையில் குறைந்துதான் இருக்க வேண்டும் என்று விரும்புவர்.

அப்படிப்பட்ட பரோபகாரியான ஶிவபெருமானால் நாம் உய்ய அருளப்பட்டவையே வேதஶிவாகமங்கள். வேதஶிவாகமங்களோ நாம் உய்ய கர்மாக்களை விதிக்கின்றன. கர்மாக்களாகிய பாஶத்தினாலும், மாயா பாஶத்தினாலும், ஆணவமாகிய பாஶம் முதிர்ச்சி பெற்று வலுவிழக்கும். ஆணவம் வலுவிழந்தால் ஆத்ம-சைதன்யம் வெளிப்படும். எனவே கர்மாக்கள் முக்கியமானவை.

கர்மாக்கள் நித்யம் - நைமித்திகம் காம்யம் என்று மூன்று வகை. மூவகை கர்மாக்களிலும் குறைவு ஏற்பட்டால், அவை உரிய பயனை அளிக்கமாட்டா. எனவே வேண்டுமென்றே, தெரிந்து கொண்டே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறைபாடு நிகழும்படி நாம் நடந்து கொண்டால், அந்த கர்மாக்கள் அவைக்குரிய பயனைத் தரமாட்டா. அவைகளுக்கு ப்ராயஶ்சித்தமும் கிடையாது.

தெரியாமல் குறைபாடு ஏற்பட்டு, பின்பு நம் அறிவிற்கு எட்டும்போது, அக்குறைபாட்டினை நீக்குவதற்கு ப்ராயஶ்சித்த கர்மாக்கள் விதிக்கப்பட்டுள்ளன. அதாவது குறையை சரி செய்யவே ப்ராயஶ்சித்த கர்மாக்கள் உள்ளன. எனவே ப்ராயஶ்சித்தமானது, நித்யம் நைமித்திகம் காம்யம் ஆகிய மூன்றிற்கும் அங்கமாகும்.

குறிப்பிட்ட தேதிக்குள் மின் கட்டணத்தை கட்டியே தீர வேண்டும். அந்த தேதியை மீறினால், மின்சாரம் துண்டிக்கப்படும். அவ்வாறு துண்டிக்கப்படாமலிருக்க அபராதத் தொகையைக் கட்டவேண்டும். அபராதத்தொகை போன்றதே ப்ராயஶ்சித்த கர்மாக்கள். அபராதத் தொகையை மட்டுமே கட்டினால் அது போதுமானதல்ல. அத்துடன் சேர்த்து மின் கட்டணத்தையும் கட்ட வேண்டும். அதுபோல் ப்ராயஶ்சித்த கர்மாவுடன், விடுபட்டதையும் சேர்த்து செய்யவேண்டும். எனவே ப்ராயஶ்சித்தகர்மா லோபத்திற்கு ஒரு தண்டனை போன்றதே தவிர, லோபத்தினை நிரப்பவல்லது அல்ல.

பவித்ரோத்ஸவமானது கர்மலோபத்தினை களைவதோடல்லாமல், அக்கர்மாவினை பூரணமாகவும் செய்யக்கூடியது. எனவே கர்மலோப பிதுரம், கர்மபூரகம் என்று பவித்ரோத்ஸவத்தைக் குறிப்பிடுகின்றனர்.

எனவே பிறவற்றிற்கும் இதற்கும் வேறுபாடு உள்ளதால், பவித்ரோத்ஸவமானது நித்யமும் அல்ல, நைமித்திகமும் அல்ல, காம்யமும் அல்ல, ப்ராயஶ்சித்தமும் அல்ல. ஆனால் நித்ய கர்மாவிற்கு ஓர் அங்கமாகும், எனவே பவித்ரோத்ஸவத்தை, ஸம்வத்ஸர ப்ராயஶ்சித்தம் என்றோ, நைமித்திகம் என்றோ குறிப்பிடுவதெல்லாம் ஒரு உபசார ப்ரயோகமே ஆகும்.

இன்னும் பல ஆழமான மஹத்வங்களைக் கொண்ட பவித்ரோத்ஸவமானது ''எண்ணில் ஆகமங்கள் இயம்பிய இறைவர்'' என்று சொன்னது போல பல ஆகமங்களால் பலவாறாக விவரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் ஆஶ்சர்யமான அத்புதமான விஷயங்களையெல்லாம் விவரிக்கின்றன. எல்லா ஆகமங்களையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒப்பாய்வு செய்து பவித்ரோத்ஸவத்தை வெளியிட வேண்டுமென்று அவா இருந்தும், அது முடியவில்லை. ஈஃவரன் அதற்கான கருணையைப்பொழிய வேண்டும். தற்போது ஸ்ரீமத் அகோர ஃபிவாசார்ய பத்ததியில் உள்ள ''பவித்ர விதி'' மட்டும் வெளியிடப்படுகிறது. ஒருபுறம் தமிழில் விளக்கக் குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. முடிந்தவரை ப்ரபா உரையில் உள்ள விஷயங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆங்காங்கே ஒரு சில தகவல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இது போதாது, இன்னும் பலவற்றைச்சொல்லவேண்டுமென்று சொல்லுமளவிற்கு பவித்ரோத்ஸவத்தில் விஷயங்கள் கொட்டிக்கிடக்கின்றன. இதனைப்படிப்பவர்கள் ஒன்றிற்கு இரண்டுமுறை முழுவதுமாக படித்துவிட்டு, பிறகு ப்ரயோகம் செய்து வைத்தால் கூடிய வரை எல்லாமே சிறப்பாக அமையும். இப்படிப்பட்ட ஒரு நல்ல கைங்கர்யத்தில் என்னை ஈடுபடச்செய்தவர் ஷஷ்ட்யப்தபூர்த்தி என்கிற மணிவிழாவினைக் காணும் ''தத்புருஷ ஃபிவ'' ''ப்ரதிஷ்டா பூபதி'' ஃபிவஸ்ரீ. தி. கா. பாலமணி ஃபிவாசார்யார் ஆவார். ''மணி'' என்பது ரத்தினத்தைக் குறிக்கும். எனவே மிகமிக உயர்ந்தவைகளை மணி என்று குறிப்பிடுவர். ''ரிஷீணாம் புன: ஆத்யானாம் வாசம் அர்த: அனுதாவதி'' என்ற பழமொழிக்கேற்ப, இவரது தந்தையார் வைத்த ''பாலமணி '' என்ற பெயருக்கேற்ப இவர் பால்யத்திலேயே பாலர்களுள் மணியாகத் திகழ்ந்தார். சிறு வயதிலேயே பெரும் புகழ் பெற்ற இவர் பல இடங்களுக்குச் செல்வதோடல்லாமல், மிகமிக அழகாகவும் அமைதியாகவும் பூஜாதிகளை செய்து வைப்பது இவரிடம் உள்ள சிறப்பம்ஃபமாகும். இவரது குருநாதர் வித்வான் திருவையாறு சிவஸ்ரீ.பஞ்சாபகேஃப சிவாசார்யாருக்கு அவரது மகன் ஒரு கண்மணி என்றால், இவர் மற்றொரு கண்மணி. இதையெல்லாம் மனதிற்கொண்டே ஈஃவரன் இவ்விருவரையும் மணியாகவே படைத்திருக்கிறார். அவர் சுப்ரமணி; இவர் பாலமணி.

எண்ணற்ற பெருமைகளைக்கொண்ட இப்பெரியவரின் ஷஷ்ட்யப்த பூர்த்தி ஃபாந்தியில் முக்கியமாக கலந்து கொள்ளவேண்டும் என்றும் ''பவித்ர விதி'' எனும் இந்நூலை வெளியிட வேண்டும் என்றும் என்னைத் தூண்டியது அவரது இரண்டு புத்ரர்கள். ஒருவர் ஜன்மவம்ஃபத்தைச் சார்ந்தவர். மற்றொருவர் வித்யா வம்ஃபத்தைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சார்ந்தவர். அவரது புத்ரர் சிவஸ்ரீ. பா. கணேஷ் குமார் அவர்களும் மற்றும் ஶிஷ்யர் திப்பிராஜபுரம் ஶிவஸ்ரீ. சுரேஷ் அவர்களும் தங்களின் ஜன்மகுருவான, வித்யாகுருவான ஶிவஸ்ரீ. T.K. பாலமணி ஶிவாசார்யாருக்கும் அவர்தம் தர்மபத்னீ சௌ.விஜயலக்ஷ்மீ அவர்களுக்கும் நிகழவிருக்கும் மணிவிழாவின் பொருட்டு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டுதலுக்குரியன. அவர்களையே நிமித்தமாக வைத்து, இறைவன் இச்செயலைச்செய்ய என்னைத் தூண்டியிருக்கிறார் போலும். எனவே அவர்களுக்கும், விழா நாயகர் சிவஸ்ரீ. பாலமணி ஶிவாசார்யார் தம்பதிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர இருப்பதை அறிந்த உடனேயே சிவஸ்ரீ.க.கார்திகேய ஶிவம், ஆசிரியர்-ஸ்கந்தகுரு வித்யாலயம் திருப்பரங்குன்றம், எவ்வித உபசார வார்த்தைகளையும் எதிர்பாராமல் ஒரு வாரத்திற்குள்ளேயே க்ரந்த எழுத்தில் மூலத்தினை தானே அச்சுக்கோர்த்து, பிழைகளைத் திருத்தி, நூல்வடிவமும் அளித்து அனுப்பி வைத்துவிட்டார். இந்நூலில் வரும் வேத மந்த்ரங்களை, திப்பிராஜபுரம் வேத அத்யாபகர், திருப்பரங்குன்றம் வேத அத்யாபகர் ஆகியோர் பார்வையிட்டபோதிலும், சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரியின் முன்னாள் முதல்வர், ப்ரஹ்மஸ்ரீ டாக்டர் R. க்ருஷ்ணமூர்த்தி ஶாஸ்த்ரிகள் மிகுந்த எழுத்துப்பிழைகளையும் சுட்டிக் காட்டியிருந்தார். எனவே தென்னிந்திய அர்ச்சகர் சங்க வெளியீடு, 1965 பவித்ரோத்ஸவ விதி நூலில் உள்ள வேத பாகங்களை உள்ளபடியே அச்சிட முடியவில்லை. நேரக்குறைவால் புதிதாக அச்சுக் கோர்க்க இயலாததால், வேத புத்தகத்தில் ஆங்காங்கே உள்ள, தேவையான வேத மந்த்ரங்களைக் கண்டுபிடித்து, அவைகளை சரிசெய்து அச்சிட வேண்டிய மிகவும் ஶ்ரமமான சூழ்நிலை ஏற்பட்டது. ஈஶ்வர க்ருபையால் இதனைப் பலரின் உதவியோடு செவ்வனே செய்தவர் யஜுர்வேதாத்யாயீ, தத்புருஷ ·ஶிவ, சிவஸ்ரீ. கபாலி வைத்யநாத குருக்கள், பரம்பரை அர்ச்சகம், ஸ்தானிகம், ஸ்ரீ கபாலீஶ்வரர் திருக்கோயில், மயிலை ஆவார். மேலும் எழுத்துப் பிழைகளையும் திருத்தி உதவினார். தமிழ் விளக்கக் குறிப்பினைப் படியெடுத்தல், வேத பாகங்களை ஸ்கேன் செய்தல், எழுத்துப் பிழை சரி பார்த்தல் போன்ற பலவற்றை, அகோரஶிவ ஶிவஸ்ரீ கண்ணன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶிவஶ்ரீ. சேகர், ஶிவஶ்ரீ. வெங்கடேசன், ஶிவஶ்ரீ. சந்த்ரசேகர், ப்ரஹ்மஶ்ரீ. ஶிவராமன், (சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரி மாணவர்கள்) ஆகியோர் உத்ஸாஹத்துடன் இரவு பகல் பாராமல் செய்துள்ளனர். டாக்டர் M. ரகு, நூலகர், சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரி, வேத பாகங்களை மிக அழகாக Re-arrange செய்து கொடுத்துள்ளார். திருமதி. V. கௌரீ, உதவித் தலைமை ஆசிரியை, ஸாவித்ரி அம்மாள் ஓரியண்டல் மேனிலைப்பள்ளி, திரு. M. தக்ஷிணாமூர்த்தி, ராமக்ருஷ்ணா மடம், ஆகியோர் மிக விரைவாகவும் அழகாகவும் பிழையின்றியும் தமிழ் அச்சுக்கோர்ப்பினை செய்து கொடுத்துள்ளனர். இவை அனைத்தும் கணினியின் வடிவமைப்பைப் பொருத்தே சிறப்பாக அமைய முடியும். ஸ்ரீ. B. கணபதி ஸுப்ரஹ்மண்யம், சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரி, அவர்கள் தனது பல அலுவல்களுக்கு இடையே மிகவும் பொறுமையுடனும் உத்ஸாஹத்துடனும் மேற்படி எல்லோரின் முயற்சிகளையும் வெற்றி பெறச் செய்ய மிக அழகாக கணினியில் வடிவமைத்து உதவியிருக்கிறார். அவரது தேர்ச்சியான அனுபவமே இதற்கு மூலமாகும்.

ஸ்ரீ ஹரீஷ் ப்ரிண்டர்ஸ் உரிமையாளர் ஸ்ரீ. ராமசந்த்ரன் அவர்கள் மலிவான விலையில், நேர்த்தியான தாளில் அழகாக அச்சிட்டுத் தந்துள்ளார். குறிப்பிட்ட நாளைக்காட்டிலும் இரண்டு நாட்கள் தாமதமாக நாங்கள் படிமத்தை அளித்த போதிலும் கோபப்படாமல் குறித்த காலத்திலேயே அச்சிட்டுக்கொடுத்தது அவரது உழைப்பினையும், பெருந்தன்மையையும் காட்டுகிறது.

இவ்வளவு பேரின் எதிர்பார்ப்பற்ற உழைப்பினால் வெளியாகும் இந்நூலினை ஒருவர் நன்கு படித்து நல்ல முறையில் ஒரு பவித்ரோத்ஸவத்தைச் செய்தால், அவருக்கு என்ன பயன் கிட்டுமோ அதற்கீடான பயன் மேற்படி அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்று ஈஶ்வரனை மனம், மொழி, மெய்களால் ப்ரார்த்திக்கிறேன். இந்நூலில் பிழைகள் எவ்வகையில் ஏற்பட்டிருந்தாலும் அவற்றை எங்களுக்குத் தெரிவிக்குமாறும், அருகிலுள்ள தக்க சான்றோர்களிடத்தில் திருத்திக்கொள்ளுமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற ஒரு புண்யமான கார்யத்தில் எங்களை ஈடுபடச்செய்த மணிவிழா காணும் ஶிவஶ்ரீ பாலமணி சிவாசார்யார் - ஸௌ. விஜயலக்ஷ்மீ அம்மாள் தம்பதிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேத ஶிவாகமம் போற்றும் பாதையில் தங்கள் குடும்பத்தாருடன் இன்னும் சிறந்து வாழ்ந்து, பூர்ணாபிஷேகம் போன்ற பற்பல உத்ஸவங்களைக்கண்டு நீடூழி வாழ எம்பெருமான் ஸ்ரீ கற்பகாம்பாள் உடனுறை ஸ்ரீ கபாலீஶ்வர பெருமானை ப்ரார்த்திக்கிறேன்.

மேற்படி விஷயத்தில் எனது ஒவ்வொரு அசைவிற்கும் காரணமானவர்களான குருநாதர், சிவஸ்ரீ ஸோமஶேகர சிவாசார்யார் அவர்களையும், ஆசார்யர் சிவஸ்ரீ. ஸபாரத்ன சிவாசார்யார் அவர்களையும் த்ரிகரணங்களால் நமஸ்கரிக்கிறேன்.

இப்படிக்கு,

'அகோர ஶிவாசார்ய'

ப்ரஹ்மஸ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள்

இலக்கண விரிவுரையாளர்,

சென்னை ஸம்ஸ்க்ருத கல்லூரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌣𑌿𑌕𑌾

1. 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌕𑍋𑌶𑍋𑌪𑌕𑌰𑌣𑌸𑌮𑌾𑌹𑌰𑌣 𑌵𑌿𑌧𑌿𑌃
2. 𑌮𑌣𑍍𑌡𑌪𑌪𑍂𑌜𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑍀𑌯 𑌵𑌿𑌧𑌿𑌃
3. 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌃
4. 𑌶𑌿𑌵𑌹𑌸𑍍𑌤𑌕𑌰𑌣𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌃
5. 𑌶𑌿𑌵𑌹𑌸𑍍𑌤𑌕𑌰𑌣𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌣𑌾𑌦𑌿𑌕𑌮𑍍
6. 𑌶𑌿𑌵𑌾𑌵𑌾𑌹𑌨𑌾
7. 𑌮𑌣𑍍𑌡𑌪𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃
8. 𑌮𑌣𑍍𑌡𑌪𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑌣𑍀𑌯 𑌵𑌿𑌧𑌿𑌃
9. 𑌸𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌶𑌿𑌵𑌕𑍁𑌮𑍍𑌭𑌵𑌰𑍍𑌧𑌨𑍀𑌪𑍂𑌜𑌾 𑌵𑌿𑌧𑌿𑌃
10. 𑌗𑌣𑍇𑌶𑌪𑍂𑌜𑌾 𑌵𑌿𑌧𑌿𑌃
11. 𑌐𑌷𑍍𑌟𑍍𑌰𑌿𑌷𑍍𑌟𑌪𑍂𑌜𑌾 𑌵𑌿𑌧𑌿𑌃
12. 𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌧𑌿𑌃
13. 𑌅𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌥𑌾𑌪𑌨 𑌵𑌿𑌧𑌿𑌃
14. 𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃
15. 𑌵𑌾𑌗𑍀𑌶𑍍𑌵𑌰𑍀𑌵𑌾𑌗𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌵𑌾𑌹𑌨𑌮𑍍
16. 𑌵𑌹𑍍𑌨𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌃
17. 𑌵𑌹𑍍𑌨𑌿𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑌣𑍀𑌯𑌵𑌿𑌧𑌿𑌃
18. 𑌗𑌰𑍍𑌭𑌾𑌧𑌾𑌨𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃
19. 𑌗𑌰𑍍𑌭𑌾𑌧𑌾𑌨𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑌣𑍀𑌯𑌵𑌿𑌧𑌿𑌃
20. 𑌅𑌗𑍍𑌨𑌿𑌜𑌨𑌨𑌕𑍍𑌰𑌮𑌃
21. 𑌶𑌿𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌪𑍍𑌰𑌣𑌯𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃
22. 𑌅𑌗𑍍𑌨𑍌𑌶𑌿𑌵𑌯𑌜𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌹𑍋𑌮𑌵𑌿𑌧𑌿𑌃
23. 𑌚𑌰𑍁𑌪𑌾𑌕𑌃
24. 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌧𑌿𑌵𑌾𑌸𑌨𑌾𑌦𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍
25. 𑌗𑌨𑍍𑌧𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌃
26. 𑌶𑍈𑌵𑌸𑍍𑌯 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑍀𑌯𑌵𑌿𑌧𑌿𑌃

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27. 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌭𑍋𑌗𑌾𑌙𑍍𑌗𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌨𑌿𑌵𑍇𑌦𑌨𑌵𑌿𑌧𑌿𑌃
28. 𑌮𑌹𑌾𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣𑌕𑍍𑌰𑌮𑌃
29. 𑌮𑌹𑌾𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑌣𑍀𑌯 𑌵𑌿𑌧𑌿𑌃
30. 𑌕𑍁𑌮𑍍𑌭𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑌶𑌿𑌵𑌾𑌯𑌪𑍂𑌕𑍍𑌰𑌿𑌯𑌾
31. 𑌬𑌲𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌮𑍍
32. 𑌬𑌲𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑌣𑍀𑌯𑌵𑌿𑌧𑌿𑌃
33. 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌰𑌕𑍍𑌷𑌾
34. 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌗𑍁𑌰𑍁𑌪𑍂𑌜𑌾𑌦𑌿𑌕𑌮𑍍
35. 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌦𑌿𑌵𑌸𑍇
𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑍀𑌯𑌵𑌿𑌧𑌿𑌃
36. 𑌉𑌤𑍍𑌸𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣 𑌵𑌿𑌧𑌿𑌃
37. 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣 𑌵𑌿𑌧𑌿𑌃
38. 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌮𑍍
39. 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑌣𑍀𑌯𑌵𑌿𑌧𑌿𑌃
40. 𑌬𑌲𑌿𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌧𑌿𑌃
41. 𑌸𑌦𑌸𑍍𑌯𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌧𑌿𑌃
42. 𑌭𑍋𑌜𑌨𑌵𑌿𑌧𑌿𑌃
43. 𑌏𑌕𑌾𑌹𑌪𑌕𑍍𑌷𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌦𑌿𑌨𑌕𑌰𑌣𑍀𑌯𑌵𑌿𑌧𑌿𑌃
44. 𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌰𑍍𑌪𑌣𑌵𑌿𑌧𑌿𑌃
45. 𑌯𑌾𑌗𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨𑌕𑍍𑌰𑌮𑌃
46. 𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨𑌭𑍁𑌕𑍍𑌤𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃
47. 𑌸𑌦𑍍𑌯𑍋𑌧𑌿𑌵𑌾𑌸𑍇 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌕𑍍𑌰𑌮𑌃
48. 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌶𑌨𑌵𑌿𑌧𑌿𑌃
49. 𑌗𑍁𑌰𑍁𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌧𑌿𑌃
50. 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌗𑍁𑌰𑍁𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌕𑌮𑍍
51. 𑌗𑍁𑌰𑍁𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍍𑌯𑌭𑌾𑌵𑍇 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌕𑌰𑌣𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஶிவமயம்

ஶ்ரீ கு³ருப்⁴யோ நம:

க்ரியாக்ரமத்³யோதிகாக்²யா

ஶ்ரீமத் - அகோ⁴ரஶிவாசார்யபத்³த⁴தி:

பவித்ரவிதி⁴:

த்³ராவிட³ விவரண ஸஹித:

த்³ராவிட³ விவரணம்

ப்³ரஹ்மஶ்ரீ. கெ. கருணாஸுந்த³ர ஶர்மா:

வ்யாகரணாசார்ய:,

மத்³ராபுரீ ஸம்ஸ்க்ருத மஹாவித்³யாலய:

மயிலாபுரீ

ப்ரகாஶனம்

“தத்த்வார்த்த²ஶிவ”, “ப்ரதிஷ்டா²ஹம்ஸபதி”

ஶிவஶ்ரீ. தி. கா. பா³லஸுப்³ரமணி ஶிவாசார்ய:

ஶ்ரீமதீ. பா³. விஜயலக்ஷ்மீ

ஸம்பாத்³யா:

ஷஷ்ட்யப்³த³பூர்த்தி ஶாந்த்யுத்ஸவ:

14.08.2010

ஶ்ரீ ஜ்ஞானாம்பி³கா ஶைவஶிவாக³ம பாட²ஶாலா

திருக்கண்ணங்குடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஶிவமஸ்து

பவித்ரவிதி

பவித்ரகர்மாவிற்குரிய பொருட்களைச் சேகரித்தல்

- கூறப்பட்ட காலத்தில் கூறப்பட்ட முறையில் பவித்ரங்களைத் தயார் செய்தல்.
- மண்ணினாலான புதிய யாகத்ரவ்யங்களையும் தயார் செய்தல். அல்லது தாம்ரம் போன்றவற்றாலான பாத்ரங்களை ஶுத்தம் செய்தல்.
- ஸமித், தர்பை, புஷ்பம், அருகம்பில் போன்றவற்றைச் சேகரித்தல்.

மண்டப பூஜைக்கு முன்பாகச் செய்யவேண்டியவை

- ஸப்தமீ அல்லது த்ரயோதஶீ அன்று, காலை மற்றும் மதியம் செய்யவேண்டியதாகிய இரண்டு ஆஹ்னிகங்களையும் செய்து முடித்தல்.
- மாலையில் யாகஶாலையை பூமாலைகளால் அலங்கரித்தல்.
- பவித்ரோத்ஸவத்தின் பொருட்டுச்செய்ய வேண்டியதாகிய நைமித்திக ஶைவ ஸந்த்யாவந்தனத்தைச் செய்துமுடித்து (நித்யபடி செய்யும் ஶைவ ஸந்த்யாவந்தனத்தினைத் தவிரவும், மறுபடி செய்யும் ஶைவ ஸந்த்யாவந்தனம் இது.) பிறகு விஶேஷ தர்பணத்தைச் செய்தல்.
- பரீக்ஷிக்கப்பட்டு பின்பு ஸ்வீகரிக்கப்பட்ட பூமியில், (யாக ஶாலையில்) இந்த்ரன் மற்றும் அக்னியின் திஶைகளுக்கு இடையில் ஶிவஸூர்யனை, நித்யபடியில் சொல்லியபடியே பூஜித்து விஸர்ஜனம் செய்யாமல் விடுத்தல்.

த்வாரபாலர்கள் போன்றோரைப் பூஜிக்கும் முறை

- ஆசமனம் செய்து, ஸகளீகரணம் செய்து, பின்பு ப்ரணவங்களுடன் கூடிய ஸாமான்யார்க்யத்தினைக் கையில் கொண்டவனாய், நான்கு த்வாரங்களையும் அஸ்த்ர மந்த்ரத்தால் ப்ரோக்ஷித்தல்.
- கிழக்கு த்வாரத்தில் 'ஓம் ஹ்யைம் ஶாந்திகலா த்வாராய நமঃ' என்றும், தெற்கு த்வாரத்தில் 'ஓம் ஹ்ரூம் வித்யாகலாத்வாராய நமঃ' என்றும், மேற்கு த்வாரத்தில், 'ஓம் ஹ்லாம் நிவ்ருத்திகலா த்வாராய நமঃ' என்றும், வடக்கு த்வாரத்தில், 'ஓம் ஹ்வீம் ப்ரதிஷ்டாகலா த்வாராய நமঃ' என்றும் பூஜித்தல்.
- அதே போல, அந்தந்த த்வாரங்களின் இரு பக்கங்களிலும், தனது வலதுபக்கம், தனது இடதுபக்கம் என்ற முறையில், கிழக்கு த்வாரம் முதல் வடக்கு த்வாரம் வரை—

  1. ஓம் ஹாம் நந்தினே நமঃ 2. ஓம் ஹாம் மஹாகாளாய நமঃ
  3. ஓம் ஹாம் ப்ருங்கிணே நமঃ 4. ஓம் ஹாம் விநாயகாய நமঃ
  5. ஓம் ஹாம் வ்ருஷபாய நமঃ 6. ஓம் ஹாம் ஸ்கந்தாய நமঃ
  7. ஓம் ஹாம் தேவ்யை நமঃ 8. ஓம் ஹாம் சண்டாய நமঃ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌉
𑌶𑌿𑌵𑌮𑌸𑍍𑌤𑍁 ॥

𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌃

𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌕𑌲𑍍𑌪-𑌉𑌪𑌕𑌰𑌣-𑌸𑌮𑌾𑌹𑌰𑌣-𑌵𑌿𑌧𑌿𑌃

𑌅𑌥 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌃 । 𑌉𑌕𑍍𑌤𑌕𑌾𑌲𑍇, 𑌉𑌕𑍍𑌤𑌵𑌤𑍍 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑍍𑌯, 𑌯𑌾𑌗𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌊𑌰𑍍𑌣𑌮𑌯𑌾𑌨𑌿 𑌨𑌵𑌾𑌨𑌿, 𑌤𑌾𑌮𑍍𑌰𑌾𑌦𑌿𑌮𑌯𑌾𑌨𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌵𑌿𑌧𑌾𑌯, 𑌸𑌶𑌿𑌷𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌕𑌰𑌣𑌾𑌨𑌿 𑌸𑌮𑌾𑌹𑌰𑍇𑌤𑍍,

𑌗𑌣𑌪𑌪𑍂𑌜𑌾-𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑍀𑌯-𑌵𑌿𑌧𑌿𑌃

𑌸𑌪𑍍𑌤𑌮𑍍𑌯𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍍𑌨𑌿𑌕𑌚𑌯𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯, 𑌸𑌾𑌯𑌾𑌹𑍍𑌨𑍇 𑌯𑌾𑌗𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯, 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑍀𑌂 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌂, 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌰𑍍𑌪𑌣𑌂 𑌚 𑌵𑌿𑌧𑌾𑌯, 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌯𑌾𑌂 𑌭𑍁𑌵𑌿, 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌮𑌤𑌯𑍋𑌃 𑌕𑌲𑍍𑌯𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵 𑌕𑌲𑌶𑌪𑍂𑌰𑍍𑌵𑌂, 𑌅𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯𑍈𑌵,

𑌦𑍍𑌵𑌾𑌰𑌪𑌾𑌲𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌚𑌨𑌕𑍍𑌰𑌮𑌃

𑌸𑌮𑌾𑌚𑌮𑍍𑌯, 𑌸𑌕𑌲𑍀𑌕𑍃𑌤𑍍𑌯, 𑌪𑍍𑌰𑌣𑌵𑌸𑌹𑌿𑌤𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌘𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑌃, 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯, '𑌓𑌂 𑌹𑍈𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌲𑌾𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌇𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇, '𑌓𑌂 𑌹𑍂𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌲𑌾𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌇𑌤𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇, '𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌲𑌾𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌇𑌤𑌿 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇, '𑌓𑌂 𑌹𑍀𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌕𑌲𑌾𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃' 𑌇𑌤𑌿 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, 𑌤𑌥𑍈𑌵 𑌤𑌚𑍍𑌛𑌾𑌖𑌯𑍋𑌃 𑌸𑍍𑌵𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌵𑌾𑌮𑌸𑍍𑌥𑌯𑍋𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 "𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑍇 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌮𑌹𑌾𑌕𑌾𑌲𑌾𑌯 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌭𑍃𑌙𑍍𑌗𑌿𑌣𑍇 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌯𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌵𑍃𑌷𑌭𑌾𑌯 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌾𑌯 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌦𑍇𑌵𑍍𑌯𑍈 𑌨𑌮𑌃,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று ஒவ்வொரு த்வாரத்திற்கும் தலா இருவரை, தனது வலது, தனது இடது என்ற முறையில், பக்கவாட்டிலுள்ள இரு கலஶங்களில் த்வாரபாலகர்களைப் பூஜித்தல்.

- மேற்கு த்வாரத்தில் நித்யபடியில் சொன்னபடி த்வாரபாலகர்களைப் பூஜித்து, விக்னங்களை விரட்டுதல்.
- பிற மூன்று த்வாரங்களையும் அஸ்த்ரமந்த்ரம் சொல்லி மூடுதல்.
- மேற்குவாயிலின் வழியாக உள்ளே புகுதல்.
- வாயிற்படியின் கீழே ரக்ஷையின் பொருட்டு அஸ்த்ர மந்த்ரத்தை ந்யஸித்தல்.
- ப்ரதக்ஷிணமாகச் சென்று நிர்ருதி மூலையில் 'ஓம் ஹாம் வாஸ்த்வதிபதயே ப்ரஹ்மணே நமঃ' என்று பூவினை ஸமர்ப்பித்தல்.
- அஸ்த்ரமயமான ப்ராகாரத்தினுலும், கவசமந்த்ரத்தால் அவகுண்டனம் செய்வதாலும் யாகஶாலையை ரக்ஷித்தல்.
- யாகஶாலையின் மையத்தில் அமைக்கப்பட்ட மண்டலத்தின் தெற்கு திஶையில், மான்தோல் போன்றவற்றில், வடக்கு முகமாக அமருதல்.

ஶிவஹஸ்தம் செய்வதற்கு முன்பாகச்செய்ய வேண்டியவை

- பூதஶுத்தியைச் செய்து, பின்பு, முதலில் (நித்யபடி விதியில்) சொல்லியபடி கலாந்யாஸ பூர்வகமாக அங்க ந்யாஸத்தினையும் செய்தல்.
- அந்தர்யஜனம், அந்தர்ஹவனம், த்யானம் ஆகியவற்றைச் செய்தவனுய், மூன்றுமுறை கைதட்டுதல் போன்றவற்றால் இருப்பிடத்தினை ரக்ஷித்தல்.
- பால் முதலிய எட்டு த்ரவ்யங்களை அங்கமாகக்கொண்ட விஶேஷார்க்யத்தைத் தயாரித்தல்.
- அந்த ஜலத்தினுல் தனது தலையில் தெளித்துக்கொண்டு, பின் தர்பையால் அந்த ஜலத்தினால் யாகத்திற்குத் தேவைப்படும் பொருட்களை அஸ்த்ரமந்த்ரத்தால் ப்ரோக்ஷித்து, கவசமந்த்ரத்தால் அப்யுக்ஷணம் செய்து, ஹ்ருதய மந்த்ரத்தால் அபிமந்த்ரணம் செய்து, அவகுண்டனத்தையும் அம்ருதீ-கரணத்தையும் செய்தல்.
- பின் சந்தனத்தினுல் நெற்றியில் திலகம் செய்து, தன்னைப் பூஜித்து, மந்த்ரஶுத்தியைச் செய்தல்.

ஶிவஹஸ்தம் செய்து அதனைத் தன்மேல் ஆரோபணம் செய்தல்

- சந்தனத்தினைத் தடவிக்கொண்டு, ஆஸனம், மூர்த்தி, முதலிய ஸம்ஹிதா மந்த்ரங்களால் தனது (வலது) கையினை ஶிவமயமாகச் செய்து, அதனைத் தேஜோரூபமாக எண்ணி, தனது தலையில் அதனை ஏற்றிக்கொள்ளுதல்.
- அஸ்த்ர மந்த்ரத்தினால் ஏழுமுறை ஜபிக்கப்பட்ட ஜ்ஞானகட்கத்தினை எடுத்துக் கொள்ளுதல்.

ஶிவபாவனை

- ''முதலாவது ஸர்வஜ்ஞனாகிய ஶிவபெருமானாகவே நான் இருக்கிறேன். யாகத்தில் எனக்கே முக்யத்வம் உள்ளது'' என்று ஶிவபெருமானைக் காட்டிலும் இரண்டாவது நிலையற்றவனாய்த் தன்னை நினைத்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓ ம் ஹா ம் வண்ணாய நமஃ, இதி வ்ருதிவாரம் வள வள
வாஸ்பூகவுஶயொஃ ஷ்வக்ஷிணவாகஸ்ரெண வ வாஶவாமூரு
ஸம்வஜ்ஜ்ஞ, வஸ்ரீஜெ நிதவ்க வாஶவாமூரு கஹவ்யூஜ்ஞ,
வி஧ாரு உத்ஸாயபூ, வாஶாணி கநாநி கலைஷ்ண ஸம்வடி,
வஸ்ரீகஜாஶொண ககஃவ்ருவிஶ்ஞ, கஷ்டீ உத்ஷ்வெ ஶக்ஷாவை
விநஸ்ஞ, வ்ரக்ஷிணம் மகா, 'ஓம் ஹாம் வாஸ்ணிவதயெ
ஷ்ரஹணெ நமஃ' இதி நைஜூதெ வஷ்ஷ்ம் க்ஷா, கஸ்வ்ராகாஶ
கவவாவகணு நாஹ்ஞாம் யாமமரஹம் ஸம்ஶகஷ்ஞ, கணூரூக
க்ஷிணதஃ கரஷாஜிநாகள ஸஊக்ஞாஸஃ உவவிஶ்ஞ,

ஶிவஹஸ்தகாணவஷ்வபூகதூவ்வியிஃ

ஹஷதஶக்ஷிம் வியாய, கம்மஞாஸஞ வஷவெபூாககவக
குூாநஞாஸவஷவபூம் வியாய, விஹித கஷயூஜந ஹவந யஞாநஃ
தாமுத்ருயாஜிநா யாக ஸம்ஶகஷ்ஞ, கஷீஶாஜிஸாஷாம்ம
விஶெஷாவபூஞ்ஷ உவகல்பூஞ, தக்ஷம் ஹஸா ஷ்வஶிஶஹி
ஸம்வ்ராகஷ்ஞ, ஸகஶஜமூெ யாமொவகாணக்ஷவஞாதஷ
கஹைஷ்ண ஸம்வ்ராகஷ்ஞ, கவவெந கஹஞகஷ்ஞ, ஹரகயெந
கஹிகஞ்ஞ, கவகணூஞ, ககரதீகயபூாக, । ததஃ வநுநெந
முூாடெ திமுகம் கரகா, குூாநககஹஞவபூஞ, கஞ்ஶக்ஷிம் வியாய,

ஶிவஹஸ்தகாணதக்ஷயிஶொவணாஜிக்ஷ

வநந-குூமூவநவஷவபூஷ குூஸந-கஷதபூஞாஜி
கஞ்ஸம்ஹிதயா ஶிவஹஸ்தம் ஸம்கல்பூஞ, தெஜொஶஷவம் யஞாகா,
ஷ்வஶிஶஹி கயிஶொவயெக । ஜ்ஞாநவஸ்ம் ஸவ்தயா
கஸ்ஜவ்தகாகாய,

ஶிவஹாவநா

"ஶிவொऽஹகாஜிஸவபூஜ்ஞொ கக யஜ்ஞ வ்ருயாநதா" இதி
ஹாவிதஶிவாவெதஃ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகமண்டப ஸம்ஸ்காரம்

- பஞ்சகவ்யத்தினைச் செய்து, விகிரங்களை[1] அஸ்த்ர மந்த்ரத்தினுல் ஏழுமுறை அபிமந்த்ரணம் செய்தல்.
- நிர்ருதி மூலையில், ஈஶான மூலையினை நோக்கி நின்றவனுக, பஞ்சகவ்யம் மற்றும் அர்க்யஜலங்களினுல் யாகஶாலையைப் ப்ரோக்ஷித்தல்.
- 'நிரீக்ஷணம்' முதல் 'சதுஷ்பத ந்யாஸம்' வரையிலான 18 ஸம்ஸ்காரங்களால் யாகஶாலையை ஸம்ஸ்கரித்தல். (பார்க்க. பக்.12.)

மண்டப ஸம்ஸ்காரத்திற்குப் பிறகு செய்யவேண்டியவை

- ஸம்ஸ்கரிக்கப்பட்ட அந்தமண்டபத்தில், ஒளிரும் ஶஸ்த்ரங்களாகத் திகழும் 'விகிர-த்ரவ்யங்களை' அஸ்த்ர மந்த்ரத்தால் இறைத்தல்.
- தர்பையாலான துடைப்பத்தினுல் அவற்றை ஒன்று சேகரித்து, ஈஶான மூலையில், யாகேஶ்வர-வர்தனியின் ஆஸனமாகச் சேர்ப்பித்தல்.
- நிர்ருதி மூலையில் வாஸ்துநாதரைப் பூஜித்தல்.
- மேற்கில்(வடமேற்கில்) 'ஓம் ஹாம் மஹாலக்ஷ்ம்யை நம:' என்று பூஜித்து, பசுமைநிறமானவளாயும், புஷ்பக் குவியல்களையும், ரத்னக்குவியல்களையும் பொழிபவளாயும், யாகமண்டபத்தின் வடிவினளாயும் அவளை பாவித்தல்.

பரிவாரங்களோடு ஶிவகும்பத்தினையும் வர்தனீயையும் பூஜித்தல்

- பின்பு ஈஶான மூலையில் அனைத்து தான்யங்களின் மேல் அமைந்ததும், (வடிகட்டித் துணியின் வழியாக) வழிந்த நீரினால் நிரம்பியதும், மாந்தளிர் போன்றவற்றால் அலங்கரிக்கப் பட்டமுகத்தினையுடையதும், மேற்கு நோக்கியதும், யாகேஶ்வரஶிவனின் உருவமாயமைந்ததுமான கும்பத்தில் சலாஸனம் கொடுத்தல்.
- அதில் ஆவரணம் மற்றும் நிரோதார்க்யம் ஆகிய இரண்டினையும் தவிர்த்து அங்கங்களோடு கூடிய பகவான் ஶிவபெருமானைப் பூஜித்தல்.
- ஶிவகும்பத்தின் தென்திஶையில், அதே போன்ற வர்தனீயில்-

(1) ஓம் அஸ்த்ராஸனாய ஹூம் பண்ணம: (2) ஓம் அஸ்த்ர மூர்த்தயே ஹூம் பண்ணம: (3) ஓம் ஶ்லீம் பஶூம் ஹூம் பட் அஸ்த்ராய ஹூம் பண்ணம: (4) ஓம் ஹ்ருதயாய ஹூம் பண்ணம: (5) ஓம் ஶ்லீம் ஶிரஸே ஹூம் பண்ணம: (6) ஓம் பம் ஶிகாயை ஹூம் பண்ணம: (7) ஓம் ஶூம் கவசாய ஹூம் பண்ணம: (8) ஓம் ஹூம் நேத்ரேப்யோ ஹூம் பண்ணம: (9) ஓம் பட் அஸ்த்ராய ஹூம் பண்ணம: என்று பாஶுபதாஸ்த்ரத்தினைப் பூஜித்தல்.

- வெள்ளை வஸ்த்ரம் போன்றவற்றால் (கும்பம்-வர்தனீ) இரண்டினையும் அலங்கரித்தல்.
- மண்டபத்தின் உட்பகுதியில், திஶைகளில் லோக-பாலர்களை வாஹனம் மற்றும் ஆயுதத்துடன் கூடியவர்களாக தியானித்து, கிழக்கு முதலிய திஶைகளிலுள்ள கும்பங்களுள்:- மஹாகாளர் மற்றும் ஸூர்யனின் நடுவில்-ஓம் ஹாம் இந்த்ராய நம:

---

1. விகிரங்கள்—லாஜம், சந்தனம், வெண்கடுகு, விபூதி, புஷ்பங்கள், தர்பைகள், அக்ஷதைகள்—ஆகிய 7 த்ரவ்யங்களையோ, அல்லது லாஜங்களை மட்டுமோ, விக்னங்கள் நீங்க, மண்டபத்தில் இறைக்க வேண்டும். எனவே இவைகளுக்கு 'விகிரங்கள்' என்று பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌮𑌣𑍍𑌡𑌪𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃

𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌂 𑌸𑌂𑌸𑌾𑌧𑍍𑌯, 𑌵𑌿𑌕𑌿𑌰𑌾𑌨𑍍 [illegible] 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌅𑌭𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯, 𑌨𑍈𑌰𑍃𑌤𑍍𑌯𑌾𑌮𑍍 𑌈𑌶𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾, 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯-𑌕𑌲𑌶𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌗𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯, 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑌾𑌦𑌿-[illegible]-𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍈𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯,

𑌮𑌣𑍍𑌡𑌪𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰-𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌕𑌰𑌣𑍀𑌯𑌵𑌿𑌧𑌿𑌃

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 [illegible] 𑌵𑌿𑌕𑌿𑌰𑌾𑌨𑍍 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯, [illegible] 𑌉𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯, 𑌵𑌰𑍍𑌧𑌨𑍍𑌯𑌾𑌸𑌨𑌾𑌯 [illegible] 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑍍𑌯, 𑌨𑍈𑌰𑍃𑌤𑍇 [illegible], 𑌓𑌂 𑌹𑌾𑌂 [illegible] 𑌨𑌮𑌃 𑌇𑌤𑌿 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, [illegible] 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 ॥

𑌸𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌶𑌿𑌵𑌕𑍁𑌮𑍍𑌭𑌵𑌰𑍍𑌧𑌨𑍀𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌧𑌿𑌃

𑌤𑌤𑌃 [illegible] "𑌓𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌸𑌨𑌾𑌯 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌶𑍍𑌲𑍀𑌂 𑌪𑌶𑍁𑌂 𑌹𑍂𑌂 𑌫𑌡𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌯 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌶𑍍𑌲𑍀𑌂 𑌶𑌿𑌰𑌸𑍇 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌪𑌂 𑌶𑌿𑌖𑌾𑌯𑍈 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌶𑍁𑌂 𑌕𑌵𑌚𑌾𑌯 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌹𑍂𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌫𑌟𑍍 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃" 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, 𑌸𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌨𑌾 𑌉𑌭𑌯𑌂 [illegible], [illegible] — 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னி மூலையில்	—	ஓம் ஹாம் அக்னயே நமஃ
விநாயகரின் மேற்கில்	—	ஓம் ஹாம் யமாய நமஃ
நிர்ருதி மூலையில்	—	ஓம் ஹாம் நிர்ருதயே நமஃ
ஸ்கந்தரின் வடக்கில்	—	ஓம் ஹாம் வருணாய நமஃ
வாயு மூலையில்	—	ஓம் ஹாம் வாயவே நமஃ
சண்டேஶரின் கிழக்கில்	—	ஓம் ஹாம் குபேராய நமஃ
ஈஶான மூலையில்	—	ஓம் ஹாம் ஈஶானாய நமஃ
அதன் தெற்கில்	—	ஓம் ஹாம் ப்ரஹ்மணே நமஃ

நிர்ருதி மூலையில்-அந்த கும்பத்தின் வடக்கில்—ஓம் ஹாம் விஷ்ணவே நமஃ என்று பூஜித்தல்.

- "ஹே இந்த்ரரே! ஶிவபெருமானின் கட்டளையின்படி விக்னங்கள் விலகுவதன் பொருட்டு, உம்மால், யாகம் முடியும்வரை உமது திசையில் கவனத்துடன் இருக்கக் கடவது!" என்றமுறையில் அனைத்து லோக-பாலகர்களையும் ஶிவபெருமானின் கட்டளையைக் கேட்கச் செய்தல்.
- பிறகு வர்தனீயை எடுத்துக்கொண்டு, மூலமந்த்ரத்தை உச்சரித்து, அஸ்த்ரமயமானக் கோட்டையை மனதில் நினைத்துக் கொண்டு, கும்பத்தின் முன்பாகச் செல்லக்கூடியதும், இடைவிடாமல் ஜலத்தினை வழிய விடுவதுமான வர்தனீயை, ஈஶானமூலை முதற்கொண்டு ஈஶான மூலை வரை சுற்றி வரச் செய்தல்.
- அவரவர் இடத்தில் முதலில் யாகேஶ்வர கும்பத்தினையும், பின்பு யாகேஶ்வர வர்தனீயையும் வைத்தல்.
- கும்பத்தில் ஸ்திராஸனத்தைப் பூஜித்து, அதில் ஶிவபெருமானைப் பூஜித்தல். வர்தனீயில் அஸ்த்ரத்தினைப் பூஜித்தல்.
- ஓம் ஹௌம் ஹ்ரௌம் ஶிவஶக்திப்யாம் நமஃ என்று லிங்க முத்ரையினால், பகமாகிய அஸ்த்ர வர்தனிக்கும், லிங்கமாகிய யாகேஶ்வர கும்பத்திற்கும் சேர்க்கையைச் செய்தல்.
- ஜ்ஞான கட்கத்தினை ஸமர்ப்பித்து, மூலமந்த்ர ஜபத்தினை ஸமர்ப்பித்து, அதன் பத்தில் ஒரு பங்கு அஸ்த்ரத்தினை ஜபித்து, வர்த்தனீயில் ஸமர்ப்பித்தல்.
- 'பகவானே! அவப்ருதமாகிய யாகத்தின் நிறைவு வரை இவ்விடத்தில் உம்மால் இருக்கக் கடவது' என்று விஜ்ஞாபித்து, நிரோதார்க்யத்தினைத் தயார் செய்து, அந்த ஜலத்தினால் அகோர மந்த்ரத்தால் நிரோதார்க்யத்தினை அளித்து, அந்த நிரோதார்க்ய பாத்ரத்தினை, அங்கேயே அசையாதபடி வைத்தல்.
- வர்த்தனீயின் ஆஸனமாகிய, ஏற்கனவே திரட்டப்பட்ட விகிரங்களிலிருந்து பல அஸ்த்ரங்கள் உண்டாவதாகவும், அந்த அஸ்த்ரங்களால், யாகஶாலையைச் சுற்றிலும் எல்லா விக்னங்களும் நீங்கியதாகவும் பாவித்தல்.

கணேஶரைப் பூஜித்தல்

- வாயு மூலையில், அதன் பூர்வ-கும்பத்தில் கணபதியை ஆராதித்து, 'அவிக்னம் அஸ்து' என்று விண்ணப்பித்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(கழுள) ஓம் ஹாம் கழுயெ நமः, ஓம் ஹாம் யமாய நமः (இதி) மணெஶஸ்ய வஸ்ரிமகோ॰ணெ, (நைஜுதெ) ஓம் ஹாம் நிஜுதயெ நமः, ஓம் ஹாம் வருணாய நமः (இதி) ஷுநஹெஸ்ராதுரெ, (வாயள) ஓம் ஹாம் வாயவெ நமः, ஓம் ஹாம் குபெராய நமः (இதி) உணுெஶஸ்யவர்வெர, (ஊஶாந்யாம்) ஓம் ஹாம் ஈஶாநாய நமः, தஸைவ தக-கோ॰ஹஸ்ய ஊகூஷிணெ ஓம் ஹாம் ஸ்ரஹணெ நமः, நைஜுதெ தக-கோ॰ஹஸ்ய உத்தரெ ஓம் ஹாம் விஷுணவெ நமः இதிஸம்பூஜ்ய,

ஹொஹொ ஶக்ர கூயா ஷுஸ்யாம் ஓிஶி விஷுவ்ரஶாஷயெ ।
ஸாவயாநெந யாமாக்ஷம் யாவக் ஷெயம் ஶிவாஜ்ஞயா ॥

இதந்நெந க்ரமெண ஸவரஂஹு ஜொகவாலுரு ஶிவாஜ்ஞாம் ஸ்ராவயெக் । ததொ வக்ரநீமாஷாய, கோ॰ஹாஜ்ரமாஉநீஷ் கவிஷ்ணிஷவயொயாரம் மர்மஜஹைெண கஸுமூமூஷ் கநூஸ்ராந் ஈம்ஶாக் ஈம்ஶ-வயூஹம் வரிஹ்யாமஂ, ஷுஷ்ாநெ வர்வசூம் கோ॰ஹம் வஸுாக் வக்ரநீஷ ஸம்ஸ்ராவ்ய, கோ॰ஹெ ஷுராஸநம் ஶிவம் ஸம்பூஜ்ய, வக்ரந்யாஷ் கஸுஷ் கஹ்யஉர்ய, ஜிம்மர்த்ரயா ஓம் ஹளம் ஹ்ளம் ஶிவஶக்திஹ்யாம் நமः இதி ஹமுஜிம்ம ஸமாயொமம் வியாய, ஜ்ஞாநவஜ்ஞம் ஸமவர்ய, மர்மஜஜ்ரஜவம், ஓஶாம்ஶதொ வக்ரந்யாமஸுஷு நிவெஶ்ய, 'கவஹுரயாக்ஷீ கசு ஹமவந கூயா ஷுாதவ்யஷ்' இதி விஜ்ஞாவ்ய, நிரொயாவர்யம் கரகா, தஷம்ஹஸா நிரொயாவர்யஷ் கவொரெண ஓகூா, தக் வாசும் தஸைவ நிஷுரும் ஸம்ஷுாவ்ய, வக்ரந்யாஸந விகிரொகூாஸைஃ யாமமரஹூஷ் கவஸாரித கஸெஷவிஷும் ஸமஷாக் ஹாவயெக் ॥

மணெஶவர்ஜாவியிः

வாயவ்யாம் தத்வர்வகோ॰ணெ மணவதிஷ் க்ராரச்ய, 'கவிஷுமஸுர' இதி விஜ்ஞாவ்ய,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இஷ்டலிங்கத்தினைப் பூஜித்தல்

- ஈஸான மூலேயில், அதன் பஶ்சிம கும்பத்தில் குருமார்களைப் பூஜித்து, அனுமதி வேண்டுதல்.
- அனுமதியைப் பெற்றவனுய் தனது இஷ்டலிங்கமாகிய ஆத்மார்த்த லிங்கத்தில், (இது, ஆத்மார்த்தத்தில் 'பவித்ராரோபணம்' செய்யும் பக்ஷம். பரார்த்தத்தில், மூலலிங்கத்தினே இங்கு எடுத்துக் கொள்ளலாம்.) பொருள் வசதிக்குத் தக்கவாறு பஞ்சகவ்யம் முதலியவற்றால் அபிஷேகம் செய்து, போகாங்க பூஜை வரை பூஜித்தல்.

மண்டலேஶ்வரரைப் பூஜித்தல்

- யாகஶாலேயின் மையப் பகுதியாகிய ப்ரஹ்ம-ஸ்தானத்தில், 'லதாலிங்கோத்பவம்' முதலியவற்றுள் ஏதாவதொரு மண்டலத்தில் அல்லது சந்தனத்தாலான மண்டலத்தில் பரம காரணமானவரும், அத்வாக்களின் பதியுமாகிய (யாகத்தின் பதியுமாகிய) ஶிவபெருமானே ஜபம் வரை ஆராதித்தல்.
- (முதலில் இஷ்டலிங்கபூஜை செய்யப்படாவிடின்) இஷ்டலிங்க பூஜை வரை செய்தல்.

அக்னிகார்யம் தொடர்பான சில முக்கியக் குறிப்புகள்

- அக்னிகார்யத்தின் விளக்கமானது விரிவிற்கு அஞ்சி விடப்படுகிறது. காஞ்சீபுரம் சாளுவ க. ராஜப்பா சிவாசார்யார் எழுதிய 'சிவாக்நி ப்ரயோகம்' என்ற நூலிலிருந்து விளக்கங்களை அறிந்து கொள்ளலாம்.
- குண்டத்தின் ஸமீபத்திற்குச் செல்லும் பொழுது ''ஸாமான்யார்க்யத்தினே'' எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும்.
- 'குண்டநாபிம் புரஸ்குர்வந்' என்ற இடத்தில், ஆஜ்யஸ்தாலியை வைக்கும் இடமான யோனியை (அரசிலை வடிவமான அமைப்பு) 'நாபி' என்று குறிப்பிடுகிறார்.
- குண்டத்திற்குரிய இந்த 18 ஸம்ஸ்காரங்களேத்தான், நாம் முதலில் மண்டபத்திற்கும் செய்தோம். (பார்க்க பக்கம்.8.)
- 'ரேகா சதுஷ்டயம்' 'வஜ்ரீகரணம்' ஆகிய ஸம்ஸ்காரங்களே 'ஹ்ருதயம்' அல்லது அஸ்த்ர மந்த்ரத்தால் செய்யலாம்.

யாகேஶ்வரர்-அஸ்த்ர வர்தனிகளுக்கு - ஆஸனத்திற்கு தான்யங்கள்

கீழிருந்து மேலாக 1.நெல் 2.கொள்ளு 3.மொச்சை 4.உளுந்து 5.பயறு 6.கடுகு 7. எள்

அஸ்த்ர - வர்தனீக்குக்கீழே விகிரங்களைத்திரட்டி ஆஸனமாகச்சேர்க்க வேண்டும்.

அஸ்த்ர - வர்தனீ மூக்கு வைத்த கிண்டியாகவும், மூக்கானது மேற்கு நுனியாகவும் இருக்கவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌧𑌿𑌃

𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌂 𑌤𑌤𑍍𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌕𑌾𑌲𑍇 𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌨𑍁 𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌅𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯, 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑍈𑌃 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑍇 𑌶𑌿𑌵𑌂 𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌵𑌿𑌭𑌵𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣 𑌹𑍋𑌮𑌾𑌙𑍍𑌗𑌪𑍂𑌜𑌾𑌕𑌲𑍍𑌪𑌂 (𑌕𑌂?) 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯,

𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌧𑌿𑌃

𑌬𑍃𑌹𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌕𑍋𑌣𑌾𑌦𑌿𑌚𑌣𑍍𑌡𑍇 𑌗𑌰𑍍𑌭𑌵𑌿𑌰𑌚𑌿𑌤-𑌚𑌣𑍍𑌡𑍇 𑌵𑌾 𑌪𑌰𑌕𑌾𑌰𑌣𑍇 𑌅𑌪𑍍𑌯𑌤𑌿𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌪𑍂𑌜𑌾𑌙𑍍𑌗𑌂 𑌵𑌾 𑌜𑌪𑌾𑌙𑍍𑌗𑌂 𑌵𑌾 𑌸𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯,

𑌅𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌮𑌨𑌵𑌿𑌧𑌿𑌃

𑌅𑌗𑍍𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌅𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯, 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑍈𑌃 𑌅𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌶𑍋𑌧𑌯, 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌸𑌸𑌂𑌭𑌾𑌰𑌂 𑌯𑌾𑌗𑍋𑌪𑌕𑌰𑌣𑌂 𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌣𑌾𑌪𑌿 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯, 𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑌮𑍀𑌪𑍇 𑌗𑌤𑍍𑌵𑌾, 𑌕𑍁𑌣𑍍𑌡𑌨𑌾𑌭𑌿𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌤𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌃 𑌉𑌪𑌵𑌿𑌶𑍇𑌤𑍍,

𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌧𑌿𑌃

𑌤𑌤𑍍𑌰 𑌅𑌨𑌾𑌮𑌿𑌕𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌨𑍇𑌤𑍍𑌰𑍇𑌣 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑌂 𑌶𑌿𑌵𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣, 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌣-𑌤𑌾𑌡𑌨𑍇 𑌕𑍁𑌶𑍈𑌃 𑌹𑍂𑌂 𑌫𑌡𑌨𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣, 𑌅𑌭𑍍𑌯𑍁𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑍌𑌷𑌡𑌨𑍍𑌤𑌕𑌵𑌚𑍇𑌨, 𑌖𑌨𑌨-𑌅𑌵𑌕𑍀𑌰𑌣-𑌪𑍂𑌰𑌣-𑌸𑌮𑍀𑌕𑌰𑌣-𑌸𑍇𑌚𑌨-𑌕𑍁𑌟𑍍𑌟𑌨-𑌸𑌂𑌮𑌾𑌰𑍍𑌜𑌨-𑌸𑌮𑌾𑌲𑍇𑌪𑌨𑌾𑌨𑌿 𑌵𑌜𑍍𑌰𑍇𑌣 𑌕𑍁𑌶𑍇𑌨 𑌵𑌿𑌧𑌾𑌯, 𑌕𑍁𑌣𑍍𑌡-𑌮𑌧𑍍𑌯-𑌪𑍂𑌰𑍍𑌵-𑌯𑌾𑌮𑍍𑌯-𑌉𑌤𑍍𑌤𑌰-𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇𑌷𑍁 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑍍 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯, 𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑌯𑌂 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑍍𑌯, 𑌤𑍍𑌰𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌂𑌵𑍇𑌷𑍍𑌟𑍍𑌯, 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑌯𑌾𑌯 𑌕𑍁𑌣𑍍𑌡𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌇𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯, 𑌪𑍍𑌰𑌾𑌗𑌾𑌯𑌤𑌂 𑌉𑌦𑌗𑌾𑌯𑌤𑌂 𑌵𑌾 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌤𑌯𑌾 𑌸𑌹 𑌰𑍇𑌖𑌾𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌂, 𑌉𑌭𑌯𑌤𑌃 𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌾𑌕𑍃𑌤𑌿𑌨𑌾 𑌕𑍁𑌶𑌦𑍍𑌵𑌯𑍇𑌨 𑌵𑌜𑍍𑌰𑍀𑌕𑌰𑌣𑌂, 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌗𑍍𑌰𑌕𑍁𑌶𑌚𑌯𑍇𑌨 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌥𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- குண்டத்தின் உட்புறம், தரையில் குழிக்கு மேலே, நான்கு புறமும் ஓரங்குல அளவில் விளிம்பு போல ஒன்று கட்டப்பட வேண்டும். அதற்கு 'கண்டம்' என்று பெயர். வாகீஶ்வரீ-வாகீஶ்வரர்கள் குண்டத்தின் அடியில் மையத்திலுள்ள பத்மத்தில் படுக்கவிருப்பதால், அதனைப் பிறர் பார்க்காமல் இருக்க வேண்டி, மேற்படி கண்டத்தில், நான்கு தர்பைகளை கிழக்கு மற்றும் வடக்கு நுனியாக கவச மந்த்ரத்தால் பரப்ப வேண்டும். இது அவர்களுக்கு அக்ஷபாடம்=திரைச்சீலை ஆகும்.

  இதிலிருந்து, 'வாகீஶ்வரீவாகீஶ்வர கூர்ச்சத்தினை குண்டத்தின் நடுவில் தான் வைக்க வேண்டும்' என்பது ஸித்தமாகிறது.
- 'விஷ்டர:' என்பதற்கு 'வ்ருக்ஷம்' என்றும் 'ஆஸனம்' என்றும் பொருள் என்று பாணினியின் ஸூத்ரப்படி (8-3-93) தெரிகிறது. அமர கோஶத்தின்படி (3-3-169) தர்பையின் முஷ்டிக்கும் கூட ''விஷ்டர:'' என்று பெயர். ஸ்ரீமத்-அகோரஶிவாசார்யபத்ததியில் வாகீஶ்வரீ வாகீஶ்வர-ஆவாஹனத்திற்கு ''கூர்ச்ச ரூபம் விஷ்டரம்'' (பவித்ரவிதி, தீக்ஷாவிதி, அந்த்யேஷ்டி விதி) என்றும், ''தர்ப்ப கூர்ச்யா விஷ்டரம்'' (நித்யாக்னி கார்ய விதி) என்றும், உள்ளது. எனவே, தர்பையின் முஷ்டியைத்தான் இவ்விடத்தில் அவர் சொல்ல விரும்புவது எனில், ''கூர்ச்ச'' என்ற சொல் வீணாகிப் போய்விடும். ஆனால் ''கூர்ச்ச'' என்று சொல்லியிருப்பதால், முடிச்சு உள்ள கூர்ச்சம் போடுவது தவறில்லை எனத் தெரிகிறது. எனவே, இங்கு விஷ்டரம் என்பதற்கு ஆஸனம் என்று தான் பொருள். ஆகவேதான் ஓம் ஹாம் வாகீஶ்வரீ-வாகீஶ்வர-ஆஸனாய நம: என்று அதனை ஆஸனமாக அளிக்க வேண்டிக் கூறுகிறார்.

யாகேஶ்வர - அஸ்த்ர வர்தனீ - கலஶங்களின் உள்ளே போடவேண்டியவை:-

I. ஸ்வர்ணம். II. ரத்னங்கள்-1.மாணிக்கம் 2.இந்த்ரநீலம் 3.வைடூர்யம் 4.பவழம் 5.முத்து 6.வைரம் 7.புஷ்பராகம் 8.ஸ்படிகம் 9.மரகதம். III. மூலிகைகள் 1.சீதேவியார் செங்கிழங்கு 2. ஓரிதழ் தாமரை 3 ப⁴த்ரம் 4. வைகங்கதம் 5.விஷ்ணு க்ராந்தி. IV. லோஹங்கள் - 1.ஸ்வர்ணம் 2.வெள்ளி 3.தாம்ரம் 4.இரும்பு 5.ஈயம் 6.துத்தநாகம் 7.பித்தளை 8.வெண்கலம் 9.ஆரம் கூடம். V. மண் 1.மலை 2.குளக்கரை 3.ஸமுத்ரம் 4.எருது - கொம்பு மண் 5.புண்ய க்ஷேத்ரம். VI. யவைகள் 1.நெல் 2.கேழ்வரகு 3.யவை 4.வரகு 5.மூங்கிலரிசி

ஹரீதக்ய: - தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய்	வசா - வசம்பு
கை³ரிக: - காவி ;	உஶீரா -முறுக்கம்பட்டை
ஜாதிலிங்க: - சாதிலிங்கம்	மாம்ஸீ (ஜடாமாம்ஸீ) -ஜடாமஞ்சீ
மனஶ்ஶிலா - மனச்சிலை	குஷ்ட²: - கோட்டம்
மஞ்ஜிஷ்டா² - மஞ்சிட்டி	ரஜநீத்³வய: (ஹரித்³ரா) - மஞ்சள், மரமஞ்சள்
தா³ர்வீ (தா³ருவீ) - மரமஞ்சள்	முஸ்த²: -கோரைக்கிழங்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாமீஶ்வரீவாமீஶ்வராவாஹநம்

கும்ஹஸ்ய **ஈஹாஸ்ஷனே** ஸஶஷாஸ் உஃபிதைஃ குஷைஃ **ஈக்ஷவாடம்** கவசெந வியாய, உசைஸ்ய **கூசபூர்வம் விஷூரம்**

ஓம் ஹாம் வாமீஶ்வரீவாமீஶ்வராஸநாய நமஃ இதி ஓகூா, தஷிங்,

" ஶெவீம் ஞுவாஹயெசிஷ்யாம் வியிவசிஶ்வராதரம் ।

ஶ்யாராம் ஐதமீம் ஆ்யாகூா ஸசாஷொ-ராஜ்ய-ஹஷணாம் ॥

வ்ருஸஜவஷநாம் வமவத்ராஹ-நயந-த்ருயாம் ।"

இதி ஆ்யாகூா, ஓம் ஹாம் வாமீஶ்வயைபூ நமஃ இதி, தசஃ வாமீஶ்வரம் ச ஓம் ஹாம் வாமீஶ்வராய நமஃ இதி மர்யாஷிஹிஃ ஈஹாஸ்சபூஸ்,

வஹ்நிந்யாஸஃ

ஈரஷைஃ, ஸயபூகாஷாஸ், சிஜமரஹாஸ், வைஶ்யமரஹாஸ், ஷூமரஹாஸ் வா வஹ்நிம் உரதாதெ தாரவாதெ வா ஞநீய, ஞுஷெயஸ்யாம் ஷெஶாநஸ்யாம் வா நியாய, ஈஹிஶகஶும் க்ரவஸ்ராஷாயபூம் ஈஷெ்ஷண ஷைஜபூதை நிஷ்ஷாயபூ, நிரீக்ஷணாஷைஃ சதஹிபூஃ ஸம்ஷ்காரைஃ ஸம்ஷ்ஷ்ரதஸ், ஓம் ஹாம் ஹம் ஹாம் வஹ்நிஉதபூயெ நமஃ இதி ஹதாஹ்நிம் வரகெண மரஹிகூா, ஹரஶயெந கும்ஹகெந நாஹஸ்ஹிநா ஷிம்ஜஹிநா ச ஸம்யொஜஸ், ரசகெண(ந) நிஷ்ஷாயபூ, ஓம் ஹாம் ஹ்ரம்வஹ்நி-சைதந்யாய நமஃ இதி வாதரஷ்உஹள விநஸ்ஸ, ஸம்ஹிதயா ஈஹிவஜஸ், ஸம்ரக்ஷஸ், ஈவகுண்ஸ், வ்ராஸாஷெந வளஷஷைநெ யெநஉஷ்யா ஈஉரதீகூரதஸ், ஞுஷாய, கும்ஷெஸ்ராவரி வ்ருஷக்ஷிணம் திருஃவரிஷாஉஸ், ஶிவவீஜஉிதி யஸ்ராகூா, விதரள ஏம்ஶஷிரதஶிரஸள ஆ்யாயந, வாமீஶ்வரீ-மஹபூநாஆ்யாம் வாமீஶ்வரெண க்ஷிவஸ்உாணம் விஹாவஸ், ஹஉிஷ்-ஜாநஃ உஷ்ணெந ஞுதவஸம்உவம் க்ஷிவெஸ் ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- **"தத: நாபிதேஶே"** என்ற இடத்தில் 'நாபி' என்பது குண்டத்தின் உள்ளே நடுவில் அமைக்கப் பட்டுள்ள தாமரை வடிவிலான ஒரு பகுதி ஆகும்.
- தர்ப-கங்கணத்தை வாகீஶ்வரீயின் இடது கையில் கட்டவேண்டும் என்று சில பிரயோகங்களிலும், வலது கையில் கட்டவேண்டும் என்று ப்ரமாணத்துடன் ''ப்ரபா'' உரையிலும் உள்ளது.
- ''வக்த்ராங்க கல்பனா'' என்பதற்காக மூன்று முறையும், ''நிஷ்க்ருதி'' என்பதற்காக மூன்று முறையும் தனித் தனியே எள்ளினால் ஆஹுதி செய்ய ''ப்ரபா'' வில் ப்ரமாணம் உள்ளது.
- ''தர்பாத்யை:ஸந்துக்ஷ்ய''—'ஸந்துக்ஷ்ய' என்பதற்கு நன்கு எரியும்படிச் செய்து என்று பொருள்.
- ஸ்தண்டிலமானால், மணலிற்கு வெளியேயும்; ஏகமேகலகுண்ட--மானால், மேகலையிலும்; த்வி மேகல குண்டமானால், இரண்டாம் மேகலையிலும்; த்ரிமேகல குண்டமானால், மத்யமேகலையிலும் 'பரிஸ்தரண' தர்பைகளைப் பரப்ப வேண்டுமென்று ப்ரபாவில் ஸ்ரீமத் சுப்ரபேத ஆகமம் ப்ரமாணமாய்க் காட்டப் பட்டுள்ளது.
- ''விஷ்டரங்கள் முப்பது தர்பைகளால் செய்யத் தக்கவை'' -ஸ்ரீமத்கிரணம் - ப்ரபா.
- ''பரிதியில் ப்ரஹ்மாதிகளும், விஷ்டரங்களில் இந்த்ராதிகளும் அக்னியைப் பார்த்தவாறு உள்ளனர்''. ஸ்ரீமத் ஸோம ஶம்பு பத்ததி. - ப்ரபா.

பவித்ரோத்ஸவ தினங்களும் காலங்களும்

- ஸப்தமீ அல்லது த்ரயோதஶி அன்று மாலை அதிவாஸம் மற்றும் கந்த பவித்ரம் சாற்றுதல்.
- அஷ்டமீ அல்லது சதுர்தஶி அன்று ப்ரதான யாகம் மற்றும் ப்ரதான பவித்ரம் சாற்றுதல்.
- பவித்ரதினம் முதல், 4 மாதங்களோ, 3 மாதங்களோ, 2 மாதங்களோ, 1 மாதமோ, 1/2 மாதமோ , ஒரு வாரமோ, 5 நாட்களோ, 3 நாட்களோ அல்லது ஒரு நாளோ வ்ரதானுஷ்டானம் செய்யலாம்.
- ஒரு நாள் பக்ஷத்தில், அஷ்டமீ அல்லது சதுர்தஶி அன்று பவித்ரம் சாற்றி விட்டு, மறுநாளன்று காலை, கடைசி யாகமாகிய அவப்ருதத்தினைச் செய்ய வேண்டும்.

தேவதைகளுக்கேற்ப ப்ரதான பவித்ர திதிகள்

அக்னிக்கு - ப்ரதமா	துர்க்கை / சண்டிக்கு - நவமீ
ப்ரஹ்மாவிற்கு - த்விதீயா	யமனுக்கு - தஶமீ
கௌரீக்கு - த்ருதீயா	இந்த்ரனுக்கு - ஏகாதஶீ
கணபதிக்கு - சதுர்த்தீ	விஷ்ணுவிற்கு - த்வாதஶீ
நாகங்களுக்கு - பஞ்சமீ	மன்மதனுக்கு - த்ரயோதஶீ
ஸ்கந்தனுக்கு - ஷஷ்டீ	மஹாதேவன்/ஶிவனுக்கு - சதுர்தஶீ
ஸூர்யனுக்கு - ஸப்தமீ	பித்ருக்களுக்கு - அமாவாசை / பௌர்ணமி
ஶிவனுக்கு - அஷ்டமீ	

பவித்ரங்களை த்விஜ-கன்யாக்கள் தயாரிப்பது உத்தமம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

वह्निविन्यासनसंस्कारकरणीयविधिः

ततः नाभिदेशे सङ्गृह्य, परिधानस्य संस्कृतिं विधाय, शलाकाग्रनामिकया तोयबिन्दुं हृदा दत्वा, कवचेन सर्पिषा प्रोक्ष्य, अस्त्रेण प्रज्वाल्य, ओं हां हूं गर्भाग्नये नमः इति गर्भाग्निं संपूज्य, गर्भरक्षार्थं अस्त्रजप्तदर्भकङ्कणं देवीहस्ते बद्ध्वा,

गर्भाधानादिसंस्कारविधिः

गर्भाधानाय सद्योजातेन अभ्यर्च्य, हृदयेन आहुतित्रयं हुत्वा, पुंसवनार्थं तृतीये मासि वामदेवेन अभ्यर्च्य, शिरसा आहुतित्रयं हुत्वा, जलबिन्दुं विनिक्षिप्य, सीमन्त-उन्नयन-निमित्तं षष्ठे मासि अघोरेण अभ्यर्च्य, शिखया आहुतित्रयं हुत्वा, शिखयैव वक्त्राङ्गकल्पना-निष्कृतिं विधाय, जननार्थं दशमे मासि पुरुषेणाभ्यर्च्य, कवचेन तिस्र आहुतीर्दत्वा, जाते गर्भे मुद्रावहनार्थं वह्निं दर्भाग्रैः संप्रोक्ष्य, देवीहस्तदर्भकङ्कणं उन्मुच्य, स्वर्णबन्धनं देव्याः कृतमिति ध्यात्वा, हृदा अभ्यर्च्य, सद्यः-सूतकनिवृत्तये कुण्डं अस्त्राम्बुना संसिच्य, दर्भेण अस्त्रेण प्रताड्य, कवचेन अभ्युक्ष्य, वह्निरक्षार्थं पूर्वादिष्वग्रान् उत्तर-पूर्वाग्रान् दर्भान् अस्त्रेण स्तीर्य, तेषु परिधि-विष्टरान् संस्थाप्य, वक्त्राणां ज्वाला-अवरोधनाय अग्नेः-पार्श्वये च दिग्भ्रमयोः परिधयः पञ्चसंख्याः दत्वा, पूर्व-पश्चिम-दक्षिण-उत्तरासु दिक्षु

1) 'ओं हां ब्रह्मणे नमः' 3) 'ओं हां रुद्राय नमः'
2) 'ओं हां विष्णवे नमः' 4) 'ओं हां अनन्ताय नमः'

इति परिधीन् संपूज्य,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- ஸம்ஸ்கரித்தவுடன் ஸ்ருக், ஸ்ருவம் ஆகிய இரண்டையும் அதோமுகமாக வைக்கவேண்டும் - ஸ்ரீமந்-ம்ருகேந்த்ரம் - ப்ரபா
- "ஸ்ருக் ஸ்ருவங்கள் இல்லாவிடில் புரஸு, அத்தி, கிம்ஶுகம், ஆகியவற்றின் இலைகளைப் பயன்படுத்தலாம்." - ஸ்ரீமத் கிரணம்.- ப்ரபா
- "ஆஜ்யத்திற்கு செய்யும் ஸம்ஸ்காரங்கள் பதினெட்டு" - ப்ரபா

பவித்ராரோஹண - காலங்கள்

மாஸம்

ஆஷாட மாஸ: = மிதுன மாஸ: = ஆனி மாதம் உத்தமம்
ஶ்ராவண மாஸ:= கர்கடக மாஸ: = ஆடி மாதம் மத்யமம்
பாத்ரபத மாஸ: = ஸிம்ஹ மாஸ: = ஆவணி மாதம் அதமம்
ஆஶ்வயுஜ மாஸ: = கன்யா மாஸ:=புரட்டாசி மாதம் மிகவும் முடியாத பக்ஷம்
கார்த்திக மாஸ: = துலா மாஸ: = ஐப்பசி மாதம் மிகவும் முடியாத பக்ஷம்

பக்ஷம்

மோக்ஷத்தினை விரும்புபவர்களுக்கு க்ருஷ்ண பக்ஷம் - விஶேஷம்
ஶுக்ல பக்ஷம் - ஸாமான்யம்
போகத்தினை விரும்புபவர்களுக்கு - ஶுக்ல பக்ஷம்

ப்ரதான - பவித்ராரோபண திதி

1.அஷ்டமீ 2.சதுர்தஶீ (ஆஷாட மாஸ ஶுக்ல பக்ஷ சதுர்தஶீயிலிருந்து, கார்த்திக மாஸ ஶுக்ல பக்ஷ அஷ்டமீ வரையே எடுத்துக் கொள்ளலாம்.)

விலக்கத்தக்கவை

குரு மௌட்யம், ஶுக்ர மௌட்யம், (அஸ்தமனம்) கூடிய காலங்கள், அதிமாஸம்.

விலக்கத்தக்கவைகளை எடுத்துக்கொள்ளுதல்

ஆஷாடம், ஶ்ராவணம், பாத்ரபதம் ஆகிய மூன்று மாதங்களிலும் குரு-ஶுக்ர மௌட்யம் இருந்தால், மூன்றினுள் ஏதோவொன்றில் உசிதப்படி செய்தே தீரவேண்டும்.

பவித்ரகர்ம நக்ஷத்ரங்கள்

ரேவதீ, க்ருத்திகை, திருவாதிரை, ரோஹிணீ-இவற்றில் ப்ரதான பவித்ரம் சாற்றலாம்.

1. ஸூர்ய பூஜை 2. ஶாந்தி முதலிய கலைகள் 3. த்வார பூஜை 4. த்வார பால பூஜை 5. பஶ்சிமத்வார பூஜை 6. வாஸ்தோஷ்பதி பூஜை 7. பூதஶுத்யாதி-ஶிவஹஸ்தகரண ப்ரயந்தம் 8. பஞ்சகவ்ய ஸாதனம் 9. வாஸ்துபதி பூஜை 10. லக்ஷ்மீ பூஜை 11. யாகேஶ்வர பூஜை 12. அஸ்த்ர-வர்தனீ பூஜை 13. லோகபால பூஜை 14. கணபதி பூஜை 15. ஸப்தகுரு பூஜை 16. மண்டலேஶ்வர பூஜை 17. மூல (இஷ்ட) லிங்க விஶேஷாபிஷேகம்.
(முதலில் பஞ்சகவ்யாபிஷேகம், பிறகு பிற அபிஷேகம்).

அக்னி கார்யம்

1. அஸ்த்ர மந்த்ரத்தால் குண்டத்தினைப் ப்ரோக்ஷித்தல்.
2. பரிதி-விஷ்டரங்களில் ப்ரஹ்மாதிகளையும் அஸ்த்ரங்களோடு கூடிய இந்த்ராதிகளையும் பூஜித்தல்.
3. முன்போலவே ஸ்ருக்-ஸ்ருவ ஸம்ஸ்காரம் ஆஜ்ய-ஸம்ஸ்காரம் பூர்ணாஹுதி.
4. அக்னியிலுள்ள ஶிவனை கந்தாதிகளால் உபசரித்தல்.
5. மந்த்ரங்களின் ஸாமான்ய தர்பணம் விஶேஷ தர்பணம்.
6. முன்தினம் இரவு துஃஸ்வப்னம் ஏற்பட்டிருந்தால், அதன் ஶாந்திக்காக அஸ்த்ரத்தால் 108 முறை ப்ராயஶ்சித்த ஹோமம். பூர்ணாஹுதி. (மந்த்ரங்களின் தர்பண-தீபனங்கள்) சரு பாகம். முன்போல சரு விபஜனம்.

மண்டப-தேவதைகளுக்கு பவித்ரம் சாற்றுதல்

⊛ ப்ரதான பவித்ரம் சாற்றும் போது கந்த பவித்ரத்தினையும் சேர்த்துச் சாற்ற வேண்டும் என்று (எனது) குரு கூறுகிறார்- ப்ரபா (இப்பழக்கம் சில ஆலயத்தில் உள்ளது.)
1. ஸூர்யனுக்கு சரு நிவேதனம்.
2. ஸூர்ய-த்வாரபாலர்கள், கணபதி, குரு ஆகியோருக்கு பவித்ர தானம்.
3. "காலாத்மனா" என்ற ஶ்லோக-மந்த்ரம் படித்தல்.
* { "காலாத்மனா த்வயா தேவ யத்-த்ருஷ்டம் மாமகே விதௌ ।
க்ருதம் க்லிஷ்டம் ஸமுத்ஸ்ருஷ்டம் ஹ்ருதம் குப்தம் ச மத்க்ருதம் ।
ததஸ்து க்லிஷ்டம் அக்லிஷ்டம் க்ருதம் புஷ்டம் அஸத்-க்ருதம் ।
ஸர்வாத்மநா அமுநா ஶம்போ (ஸூர்ய) பவித்ரேண த்வதிச்சயா" ।।
பொருள்: — ஹே தேவனே!
1. த்ருடிஃ 2. லவம் 3. நிமிஷஃ 4. காஷ்டா 5. கலா 6. முஹூர்தஃ 7. கடிகா 8. யாமஃ 9. அஹோராத்ரம் 10. பக்ஷஃ 11. மாஸஃ 12. ருதுஃ 13. அயனம் 14. ஸம்வத்ஸரஃ 15. யுகஃ 16. மன்வந்தரம் 17. கல்பஃ 18. மஹாகல்பஃ என்ற 18 விதமாக கால பேதங்கள் உன்னையே அதிஷ்டானமாகக் கொண்டு இயங்குகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

[illegible] 𑌸𑌂𑌪𑌂𑌜𑍍𑌯 [illegible] 𑌵𑌿𑌧𑌾𑌯 [illegible] 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 [illegible] 𑌪𑌂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

[illegible] 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣𑌵𑌿𑌧𑌿𑌃

𑌤𑌤𑌃 [illegible]

எனது பூஜைகளில், குறைபாட்டுடன் அனுஷ்டிக்கப்பட்டவை (க்லிஷ்டம்-க்ருதம்) சில இருக்கலாம். அஜ்ஞானத்தால், ஸம்ஸ்காரம் செய்யப்படாமலேயே சில, செய்யப்பட்டிருக்கலாம் அல்லது விடப்பட்டிருக்கலாம். (ஸமுத்ஸ்ருஷ்டம்) வேலே பளுவின் காரணத்தால் தெரிந்தே, 'ஏனோதானோ' என்று சில, செய்யப்பட்டிருக்கலாம் (ஹ்ருதம்) சில, கருமித்தனத்தோடு சிக்கனமாகச் செய்யப்பட்டிருக்கலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(துஷ்க்ருதம் குப்தம்). அல்லது தவறாகச் செய்துவிட்டு, ப்ராயஶ்சித்தட செய்யாததால், வெட்கத்தால் மறைக்கப்பட்டிருக்கலாம். (குப்தம்)

காலாத்மாவாகிய = காலத்தையே ஶரீரமாகக் கொண்ட உன்னுல், எனது பூஜாதிகளில், எப்போதாவது, என்னுல் செய்யப்பட்ட க்லிஷ்டமான, ஸமுத்ஸ்ருஷ்டமான, ஹ்ருதமான, குப்தமான, அஸத்க்ருதமான ஒரு கர்ம பார்க்கப்பட்டிருப்பின்,

ஹே ஶம்புவே! உனது இச்சையால், ஆத்மதத்வ-வித்யாதத்வ-ஶிவதத்வ ஸ்வரூபமாயும், ஸர்வவ்யாபகமாயும் (கங்காவதார பவித்ரம்) எல்லா குற்றங்குறைகளேயும் நீக்கி, நிரப்ப வல்லதாயுமுள்ள இந்த பவித்ரத்தால்,

எனது க்லிஷ்ட கர்ம, அக்லிஷ்டமாயும், ஸமுத்ஸ்ருஷ்டம், ஹ்ருதம், குப்தம் ஆகிய அஸத்-க்ருதங்கள் புஷ்டமாயும் (போஷிக்கப்பட்டவையாக) மாற வேண்டும். (குறைவினே சரி செய்ய மருந்து தேவை. நிலையை மேம்படுத்த போஷாக்கு தேவை. க்லிஷ்டகர்ம, குறை போன்றிருப்பதால், நிறைப்படுத்துல், 'அக்லிஷ்டம்' எனப்படுகிறது. 'ஸமுத்ஸ்ருஷ்டம்', 'ஹ்ருதம்', 'குப்தம்' ஆகியவற்றை மேம்படுத்த போஷாக்கு போன்றதே 'புஷ்டம்' என்பது. ஶிவபெருமானின் இச்சைப்படி, பவித்ரத்தால், அனைத்தும் அக்லிஷ்டமாயும் புஷ்டமாயும் ஆகின்றன.) }

- மேற்படி ''காலாத்மநா'' என்ற ஶ்லோகத்தில் ''ஸூர்ய'' என்ற பெயரைச் சேர்த்துச் சொல்லி, ஸ்வாஹாந்தமான ஸூர்ய மந்த்ரத்தால், பவித்ரங்களேக் கொடுத்தல். (ஶக்தியிருந்தால் ஆத்ம தத்வ வித்யா தத்வ ஶிவ தத்வ ஸர்வ தத்வ பவித்ரங்களேத் தரலாம்.)
- ஹ்ருதயாதிகளுக்கு பவித்ர-தானம்.
- க்ரஹங்களுக்குப் பவித்ர-தானம்.
- ஜபம் நிவேதனம்.
- ஸூர்யபாவநா நிவ்ருத்திக்காக ஆசமனம். ஸகளீகரணம்.
- ஶாந்த்யாதி த்வாரங்களுக்கும், நந்த்யாதி த்வாரபாலர்களுக்கும் பவித்ர-தானம்.
- வாஸ்தோஷ்பதிக்கு பவித்ர-தானம்.
- மஹாலஷ்மீக்கு பவித்ர-தானம்.
- லோகபாலர்களுக்கு பவித்ர-தானம்.

யாகேஶ்வர-வர்தனீ பவித்ரம்

1. யாகேஶ்வரவர்தனீகளுக்கு சரு நிவேதனம் (முன் விபஜனம் செய்தபடி).
2. ''காலாத்மநா'' என்ற மந்த்ரம் சொல்லுதல்.
3. பவித்ராரோபணம் செய்தல். (பரமீகரணம் போன்றவை செய்தல்).

- கணபதிக்கு பவித்ர தானம்.
- ஸப்த குருமார்களுக்கு பவித்ர தானம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

[illegible] 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, [illegible]
𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌜𑌪𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯, 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾, [illegible]
[illegible] 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰 [illegible]
[illegible] 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾,
[illegible] 𑌨𑌿𑌵𑍇𑌦𑌨 [illegible] *[illegible]
[illegible], 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 [illegible], 𑌗𑌣𑌪𑌤𑌯𑍇 [illegible]
𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 [illegible], 𑌏𑌵𑌂 [illegible] 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿
𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, ||

𑌶𑍈𑌵𑌸𑍍𑌯 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣 [illegible]

[illegible] 𑌶𑌿𑌵𑌂 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, [illegible]
[illegible] 𑌯𑌥𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯, [illegible]
[illegible] 𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯, [illegible]
𑌗𑌣𑌪𑌤𑌿-[illegible] 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 ||

மண்டலேஶ்வர-பவித்ர தானம்

சரு நிவேதனம் போன்றவை செய்து, ''காலாத் மநா...'' என்று சொல்லி, பவித்ரங்களைச் சாற்றி பரமீகரணம் போன்றவை செய்தல்.

மூல (இஷ்ட) லிங்கத்திற்கு பவித்ரம் சாற்றுதல்

ஸ்வாமியைப் பூஜித்து, வ்ரதசர்யாதி அங்கங்களையும், அன்று தயாரித்த பஞ்சகவ்யம், சரு போன்றவற்றையும் முன்தினம் போலவே ஸமர்ப்பித்தல்.

- நித்ய த்வாரபாலர்களுக்கு பவித்ர தானம்.
- தனக்கு (ஆசார்யன்) பவித்ர ஸ்வீகாரம்.
- கணபதி, லக்ஷ்மீ, குருமார்கள் ஆகிய கர்பாவரண தேவதைகளுக்கு பவித்ர தானம்.

பவித்ர விதியைச் செய்யாவிட்டால் . . . .

பவித்ர கர்மாவைச் செய்யாத-

1. ஆசார்யர் — தோஷத்தினை அடைகிறார்
2. ஸாதகாசார்யர் — மந்த்ர ஸித்தியை இழக்கிறார்
3. நிர்வாண தீக்ஷிதராகிய புத்ரகன் — இந்த ஒரு பிறப்பினால் தடுத்து நிறுத்தப்பட்டவனாய் முக்தியடைவதில்லை.
4. விஶேஷ ஸமயீ, ஸாமான்ய ஸமயீ — ஸமயத்தை சார்ந்தவராகக் கொள்ளப்படுவதில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶிவனுக்கு ப்ரதான-பவித்ரங்களை ஸமர்பணம் செய்தல்

இறைவனை ப்ரஹ்மா முதலிய ப்ரதான தேவர்களோடு கூடியவ-ராகவும், அவர்களால் ஸ்துதிக்கப்பட்டு, ஸந்தோஷமடைந்தவராயும், தனக்கு வரமளிப்பதற்காக ஸித்தமாய் இருப்பவராகவும், தியானித்து,

தூய்மையான உள்ளமுடையவனாய், ஶிவனை காலாத்மகராய் ஸ்மரித்துக் கொண்டு, வர்ஷம், அயனம், ருது, மாஸம், பக்ஷம், தினம், கடிகா, ப்ராணங்கள் (ஒரு வகையான காலவிஶேஷம்.) முதலானவற்றைத் தனது உடலாகக் கொண்டவரும், இந்த்ரியங்கள், ஶரீரம், பொருள் ஆகியன தொடர்பான அனைத்து வ்யவஹாரங்களுக்கும் ஒரே காரணமாய்த் திகழுபவரும், செய்த கர்மா, செய்யாத கர்மா, ஸமுத்ஸ்ருஷ்ட-கர்மா, க்லிஷ்டகர்மா, ஆகிய அனைத்திற்கும் ஒரே ஸாக்ஷியாகத் திகழுபவரும், க்ஷேத்ரங்களைக் (ஶரீராதிகளை) காப்பாற்றி மறைப்பவரும், அனைத்து ஐஶ்வர்யங்களுக்கும் இருப்பிடமானவரும், புகலிடமாய்த் திகழ்பவருமான ஶிவபெருமானை சிறிதுகாலம் பார்த்துக் கொண்டே, பவித்ரங்களை எடுத்துக் கொண்டு, தூபத்தில் காண்பித்து,

''காலாத் மநா த்வயா தேவ'' என்று விஜ்ஞாபித்து,

''ஓம் பூரய பூரய மக-வ்ரத-நியம-ஈஶ்வராய ஸ்வாஹா'' என்று சொல்லி, கீழ்க்கண்டவாறு பவித்ரங்களை ஸமர்பணம் செய்ய வேண்டும்.

(மகஃ = யாகம், வ்ரதம் = க்ருஷ்ண பக்ஷ அஷ்டமீ வ்ரதம் போன்றவை, நியமஃ = கோபம் கொள்ளாமை போன்றவை. இவை அனைத்திற்கும் ஶிவனே தலைவன்.)

புபுக்ஷுவானவர், ஶிவதத்வம், வித்யா தத்வம், ஆத்மதத்வம் என்ற முறையிலும்,

முமுக்ஷுவானவர், ஆத்மதத்வம், வித்யாதத்வம், ஶிவ தத்வம் என்ற முறையிலும், பவித்ரங்களைச் சாற்ற வேண்டும்.

1. ஶிவதத்வ-பவித்ரம்

36 தத்வங்களுள், ஶிவதத்வம் வரை வ்யாபித்ததாயும், ருத்ரராகிய காரணேஶ்வரரால் காப்பாற்றப்படுவதாயும் ஶிவதத்வ பாகத்தினையும் ஶிவபெருமானையும் நினைத்துக்கொண்டு.

''ஓம் ஹாம் ஹௌம் ஶிவதத்வாதிபதயே ஶிவாய ஸ்வாஹா✿'' என்று ஶிவதத்வ பவித்ரத்தை ஸமர்பணம் செய்தல்.

2. வித்யா - தத்வ பவித்ரம்

ஶுத்த வித்யாதத்வத்தோடு ஸம்பந்தப்பட்ட ஈஶ்வர தத்வம் வரை வ்யாபித்ததாயும், ஈஶ்வர தத்வம் விஷ்ணுவாகிய காரணேஶ்வரரால் காப்பாற்றப்படுவதாயும் வித்யாதத்வ பாகத்தினையும், ஶிவபெருமானையும் நினைத்துக் கொண்டு, ''ஓம் ஹாம் ஹௌம் வித்யாதத்வாதிபதயே ஶிவாய ஸ்வாஹா'' என்று வித்யா-தத்வ பவித்ரத்தை ஸமர்பணம் செய்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌶𑌿𑌵𑌸𑍍𑌯 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍋𑌪𑌣𑌵𑌿𑌧𑌿𑌃

𑌏𑌵𑌂 𑌸𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌶𑌣𑍍𑌮𑍁𑌖𑍈𑌃 𑌅𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌿𑌤𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌾𑌨𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌃 𑌅𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌥, 𑌶𑌿𑌵𑌂, 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌂, 𑌵𑌰𑍍𑌷-𑌅𑌯𑌨-𑌋𑌤𑍁-𑌮𑌾𑌸-𑌪𑌕𑍍𑌷-𑌦𑌿𑌨-𑌘𑌟𑌿𑌕𑌾-𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌂, 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌶𑌰𑍀𑌰𑌾𑌰𑌮𑍍𑌭-𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰-𑌏𑌕𑌕𑌾𑌰𑌣𑌂, 𑌕𑍃𑌤-𑌅𑌕𑍃𑌤-𑌸𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟-𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟-𑌕𑌰𑍍𑌮-𑌏𑌕𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑌂, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌂, 𑌈𑌶𑌾𑌨𑌂, 𑌶𑌰𑌣𑍍𑌯𑌂, 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌦𑌾𑌨𑌤𑌃 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌸𑌮𑌾𑌧𑌾𑌯, 𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍, 𑌕𑌿𑌞𑍍𑌚 𑌕𑌾𑌲𑌸𑌂𑌶𑍍𑌰𑌵𑌃 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑍇𑌚𑍍𑌚

𑌓𑌂 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌦𑍇𑌵 𑌯𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌮𑌾𑌮𑌕𑍇 𑌵𑌿𑌧𑍌 ।
𑌕𑍃𑌤𑌂 𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌹𑍃𑌤𑌂 𑌗𑍁𑌪𑍍𑌤𑌞𑍍𑌚 𑌗𑍂𑌢𑌤𑌃 ॥
𑌤𑌦𑌸𑍍𑌤𑍁 𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌮𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌷𑍍𑌟𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌽𑌤𑍍𑌮𑌨𑌾 𑌶𑌮𑍍𑌭𑍋 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌤𑍍𑌵𑌦𑌿𑌚𑍍𑌛𑌯𑌾 ॥

𑌓𑌂 𑌪𑍂𑌰𑌯 𑌪𑍂𑌰𑌯 𑌮𑌖𑌵𑍍𑌰𑌤𑌨𑌿𑌯𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌕𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌪𑍂𑌜𑌿𑌤𑍇 𑌆𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌹𑍌𑌂 𑌆𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌇𑌤𑌿 𑌮𑌾𑌯𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌕𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌕𑌾𑌰𑌣𑌪𑍂𑌜𑌿𑌤𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌹𑍌𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌇𑌤𑌿 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌶𑌿𑌵𑌾𑌖𑍍𑌯𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌕𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰𑌕𑌾𑌰𑌣𑌪𑍂𑌜𑌿𑌤𑍇 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌹𑍌𑌂 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌇𑌤𑌿 𑌶𑌿𑌵𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌦𑍍𑌵𑌿𑌪𑌞𑍍𑌚𑌾𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑍋𑌪𑍇𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑍇 । 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌸𑍍𑌥 𑌶𑌿𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌪𑌶𑍍𑌚𑌾𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌪𑍂𑌜𑌿𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌓𑌂 𑌹𑌾𑌂 𑌹𑍌𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌇𑌤𑌿 𑌮𑍂𑌲𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌸𑌰𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌮𑌹𑌾𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌕𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍,

✡ இங்கு "ஸ்வ" என்றால் 'தான்' என்றும், "ஹா" என்றால் "கொண்டு வருதல்" என்றும் பொருள். அதாவது "என்னையே கொண்டு வந்து ஸமர்ப்பிக்கிறேன்" என்று "ஸ்வாஹா"வின் பொருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்ம-தத்வ-பவித்ரம்

ப்ரக்ருதிதத்வத்துடன் ஸம்பந்தப்பட்ட மாயாதத்வம் வரை வ்யாபித்ததாயும், ப்ரஹ்மாவாகிய காரணேஶ்வரரால் காப்பாற்றப்படுவதாயும் ஆத்ம-தத்வ-பாகத்தினையும், ஶிவபெருமானையும் நினைத்துக் கொண்டு,

"ஓம் ஹாம் ஹௌம் ஆத்ம-தத்வாதிபதயே ஶிவாய ஸ்வாஹா" என்று கூறி ஆத்மதத்வ பவித்ரத்தை ஸமர்பணம் செய்தல்.

தத்வ-பவித்ரங்களைப் பற்றிய சில குறிப்புகள்

1. ஶிவலிங்க பாணத்தின் நுனி முதற்கொண்டு, பாணத்தின் ருத்ரபாகம் வரை நீண்டதாக "ஶிவதத்வ பவித்ர"த்தினை தயார் செய்ய வேண்டும்.

2. ஶிவலிங்க பாணத்தின் நுனி முதற்கொண்டு, பாணத்தின் விஷ்ணுபாகம் வரை நீண்டதாக "வித்யாதத்வ பவித்ரத்"தினை தயார் செய்ய வேண்டும்.

3. ஶிவலிங்க பாணத்தின் நுனி முதற்கொண்டு பாணத்தின் ப்ரஹ்மபாகம் வரை நீண்டதாக "ஆத்மதத்வ பவித்ரத்"தினை தயார் செய்ய வேண்டும்.

4. அதாவது, ஶிவதத்வ பவித்ரமானது அளவில் மிகச் சிறியதாகவும், வித்யாதத்வ பவித்ரமானது, அளவில் கொஞ்சம் பெரியதாகவும், ஆத்மதத்வ பவித்ரமானது, அளவில் எல்லாவற்றையும்விட மிகப் பெரியதாகவும் இருக்கும். இதனால் எந்த தவறும் கிடையாது. ஏனெனில் ஆகமம் விதித்துள்ளது அப்படித்தான்.

தத்வ-மந்த்ரங்களின் உச்சாரண க்ரமம்

1. ஸதாஶிவனின் 'வாசக'மாகத் திகழும், ஶிவதத்வாதிபதி மந்த்ரத்தில், ப்ரஹ்மரந்த்ர-ஸ்தானம் வரை செலுத்தி, அர்த்த சந்த்ரம்-நிரோதி ஆகியவற்றோடு கூடிய நாத பர்யந்தம் உச்சரிக்க வேண்டும்.

2. ஈஶ்வரரின் 'வாசக'மாகத் திகழும் வித்யா-தத்வாதிபதி மந்த்ரத்தில், புருவத்தின் நடுவரை செலுத்தி, பிந்து பர்யந்தம் உச்சரிக்க வேண்டும்.

3. ருத்ரரின் வாசகமாகத் திகழும் 'ஆத்ம-தத்வாதிபதி மந்த்ரத்தில், 'தாலு'வாகிய உள்நாக்கு வரை செலுத்தி, மகார பர்யந்தம் உச்சரிக்க வேண்டும்.

4. அதாவது, மேற்படி மூன்று மந்த்ரங்களிலும் "ஹௌம்" என்ற ப்ராஸாதம் உள்ளது. ப்ராஸாதம் பலவகை. வகைக்குத் தக்கவாறு ப்ராஸாதத்தின் உட்பிரிவுகளும் மாறும். அந்த ப்ராஸாதத்தை, மேற்படி, முதலில் நாத பர்யந்தமும், அடுத்து பிந்து பர்யந்தமும், அடுத்து மகார பர்யந்தமும் உச்சரித்து, பவித்ரம் சாற்ற வேண்டும். ப்ராஸாதரஹஸ்யங்கள் குருமுகமாகத் தெரிந்து கொள்ளத்தக்கவை.

5. மேற்படி எல்லா மந்த்ரங்களும் "ஸ்வாஹா" அந்தமானவை.

6. இங்கு "ஸ்வ" என்றால் 'தான்' என்றும், "ஹா" என்றால் "கொண்டு வருதல்" என்றும் பொருள். அதாவது "என்னையே கொண்டு வந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரஹ்மாஜெஹஒஶு வவித்ராணி ஜகூா, வாஷ்ஹாஜ௵ிஂ ஶிவாய ஜூஹெுந ஜகூா, ஜஹாஜாஜ்ரயா வாஜீகூரதஓ, ॥

ஸமர்ப்பிக்கிறேன்'' என்று ''ஸ்வாஹா''வின் பொருள்.

கங்காவதாரக-பவித்ர ஸமர்பணம்

36 தத்வங்களேயும், வ்யாபித்ததாயும், ப்ரஹ்மா முதலிய ஐந்து காரணேஸ்வரர்களால் காப்பாற்றப்படுவதாயும், ஶிவ-வித்யா-ஆத்ம தத்வங்களே உள்ளடக்கியதாயும் உள்ள ஸர்வதத்வத்தில் அதன் அதிஷ்டாதாக உள்ள 'ஶிவபெருமானே' தியானித்துக் கொண்டு.

''ஓம் ஹாம் ஹௌம் ஸர்வதத்வாதிபதயே ஶிவாய ஸ்வாஹா'' என்று கூறி, ஸர்வதத்வ பவித்ரமாகிய கங்காவதாரகத்தினே ஸமர்பணம் செய்தல்.

அனேத்தையும் வ்யாபித்துள்ள நிஷ்களை-ஶிவனின் வாசகமாகத் திகழும் ஸர்வ-தத்வாதிபதி மந்த்ரத்தில், ப்ராஸாதத்தை ஹகாரம் முதற்கொண்டு 'உன்மநா' வரை, மூலாதாரம் முதல் த்வாதஶாந்தம் வரை செலுத்தி உச்சரிக்க வேண்டும்.

- **போகங்களை விரும்பக் கூடியவரும் பௌதிக தீக்ஷையால் தீக்ஷிக்கப்பட்டவருமான ஆசார்யர் (புபுக்ஷு - பௌதிக ப்ரஹ்மசாரீ, க்ருஹஸ்தர் என்ற இருவரும் இந்த வகையில் ஸம்பவிப்பர்). ஶிவதத்வம், வித்யாதத்வம், ஆத்மதத்வம், கங்காவதாரகம் என்ற முறையில் பவித்ரங்களைச் சாற்ற வேண்டும்.**
- **நைஷ்டிக தீக்ஷையில், நைஷ்டிக நியமங்களில் இருக்கும் முமுக்ஷுவானவர் (நைஷ்டிக ப்ரம்ஹசாரீ, வானப்ரஸ்தர், ஸந்யாஸி ஆகியோர் இவ்வகையைச் சார்வர்). ஆத்மதத்வம், வித்யாதத்வம், ஶிவதத்வம், ஸர்வதத்வம் என்ற முறையில் பவித்ரங்களைச் சாற்ற வேண்டும்.**
- **ஶிவனுக்கு நான்கு பவித்ரங்களைக் கொடுத்துப் பின்பு ஆவரண தேவதைகளுக்கும் பவித்ரம் கொடுத்தல்.**
- **மூல மந்த்ரத்தால் ஶிவனுக்கு புஷ்பாஞ்ஜலியை ஸமர்பித்து மஹா முத்ரையால் பரமீ கரணம் செய்தல்.**

பவித்ர விதியைச்செய்யாவிடில் . . . .

ஒருதாயின் வயிற்றில் பிறந்தவர்களான பவித்ரகன், வாஸுகி என்ற இரண்டு பாம்புகள், ஶிவனைக்குறித்து 150 வருடங்கள் தவம் செய்து, ஶிவனை வரம் தரச் செய்தன. ஶிவனும் கழுத்திலும், தலையிலும் அவற்றை ஏற்றுக்கொண்டு, இவ்வாறு சொல்கிறார் → ஒவ்வொரு வருடமும் யார் ஸூத்ராரோபணம் செய்யவில்லையோ அவனது பூஜாபலன் உன்னை வந்தடையும் என்று.

- ஸித்தாந்த ஶேகரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶிவ பெருமானிடத்தில் விஜ்ஞாபனம் செய்தல்

'ஓம் த்வம் கதி: ஸர்வபூதாநாம்' என்ற ஶ்லோக மந்த்ரத்தைச் சொல்லி, கைகளில் பூக்களை எடுத்துக் கொண்டு பக்தியுடன் விஜ்ஞாபனம் செய்ய வேண்டும்.

ஶ்லோக மந்த்ரத்தின் பொருள் :-

'ஹே பரமேஶ்வரரே ! அனைத்து ஜந்துக்களுக்கும், முக்தியை அடைவதற்கான காரணமாய் = கதியாய் நீர் ஒருவரே இருக்கிறீர். சராசரங்களாகிய ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய இரண்டிலும், அவைகளில் இருக்கக் கூடிய ஆணவாதி பாஶங்களை: தோஷங்களை பரிபக்வம் செய்வதற்காகவே நீர் மேற்படி அசையும் மற்றும் அசையா உயிர்களிடத்தில் உறைகிறீர்.

அனைத்து ஜந்துக்களின் = உயிர்களின் அந்தர்யாமியாகத் திகழ்வதால், அந்தந்த உயிர்கள் செய்யும் ஶுப கர்மங்கள், அஶுப கர்மங்கள் ஆகிய இரண்டிற்கும் நீர் ஒருவரே ஸாக்ஷியாக உள்ளீர். (உயிர்களின் அனைத்து ஶுப - அஶுப கர்மங்களை பதிவு செய்து வைத்துள்ள உம்மைத் தவிர வேறொருவர் கூட அந்த எல்லா கர்மங்களுக்கும் ஸாக்ஷியாக இவ்வுலகில் இல்லை). எனது ஶரீர வ்யாபாரமாகிய க்ரியைகளுக்கும், மனோ வ்யாபாரமாகிய த்யானம் போன்றவற்றிற்கும், வாக்வ்யாபாரமாகிய ஸ்துத்யாதிகளுக்கும் நீர் ஒருவரே விஷயமாக = இலக்காகத் திகழ்கிறீர். 'மேற்படி எனது வ்யாபாரங்களுக்கு = செயல்பாடுகளுக்கு உம்மைத் தவிர வேறு இலக்கே கிடையாது.

ஹே! மஹேஶ்வரரே! மந்த்ர குறைபாட்டுடனோ, சில க்ரியை - குறைபாட்டுடனோ, த்ரவ்யங்களின் குறைபாட்டுடனோ, ஜப குறைபாட்டுடனோ, ஹோம குறைபாட்டுடனோ, பூஜை குறைபாட்டுடனோ, 'ஸ்வாகதம் தே மஹாதேவ' போன்ற வாக்யங்களைச் சொல்லாததால், வாக்ய குறைபாட்டுடனோ எந்தெந்த பூஜாதி கர்மாக்கள், என்னால் உன் பொருட்டு அனுஷ்டிக்கப்பட்டனவோ அவை அனைத்தையும் நிரப்பி பூரணமாகச் செய்வீராக! அது போல் விடப்பட்ட ஸந்த்யோபாஸனை போன்றவற்றையும் நிரப்புவீராக!

ஹே! தேவர்களின் தலைவரே! நீரே அநாதிமல முக்தரான காரணத்தால் மிகவும் புனிதமானவர். கீழ் நிலையையடைந்த ஒருவரை காப்பாற்றுபவரும் = பவித்ரமானவரும் நீரே. ஆணவம் முதலான மலங்களை நாஶம் செய்பவரும் நீரே. இவ்வாறாகத் திகழ்வதால் தான், ஸ்தாவரம், ஜங்கமம் ஆகியவற்றை உள்ளடக்கிய இவ்வனைத்துலகமும் உம்மால் வீழ்ச்சியிலிருந்து = கீழ் நிலையிலிருந்து, காப்பாற்றப்படுகிறது. பவித்ரிதமாகச் செய்யப்படுகிறது.

தேவனே! என்னால் பூஜை முதலிய எந்த வ்ரதமானது = கர்மாவானது, குறைபாட்டின் காரணத்தால் துண்டிக்கப்பட்டதாகச் செய்யப்பட்டதோ, துண்டு துண்டான நூல் போன்று வெட்டப்பட்டதோ: அந்த அனைத்து வ்ரத பூஜாதி கர்மங்களும் உனது ஆணையாகிய நூலினால் கோர்க்கப்பட்டதாக; ஒன்று திரட்டப்பட்டதாக; ஒன்றோடோன்று தொடர்புடைய ஒரே பொருளாக ஆக வேண்டும்.

பவித்ரோத்ஸவ ரகசியம்: பவித்ரங்களின் தத்வம்

மேற்படி ஶ்லோகமானது பவித்ரோத்ஸவத்தின் அவசியத்தையும், பவித்ரத்தின் உட்கருத்தையும் குறிப்பால் உணர்த்துவதாகத் திகழ்கிறது. அதாவது நாம் ஒரு வருடம் முழுவதும் செய்யக் கூடிய பூஜா வ்ரதாதி கர்மாக்களை ஒரே நூல் போன்று நினைத்துக் கொள்வோமாக. அதாவது ஒரு வருடத்தில் செய்யப்பட்ட பூஜாதி அனைத்து கர்மங்களும் சேர்ந்தாற் போல, தொடக்கம் முதல் இறுதி வரை ஒன்றாகவே இருக்கக் கூடிய நூலினைப் போல ஒன்றாகவே இருந்து கொண்டு நமக்கு வார்ஷிக பூஜா பலனைத் தர வேண்டும். ஆனால் அந்த பூஜாதிகளில் ஏற்பட்ட குறைகளினால், அந்த பூஜாதி கர்மாக்கள், பல இடங்களில் துண்டு துண்டாகச் செய்யப்பட்ட ஒரு நூலினைப் போலவே கண்டந் துண்டமாக இருக்கின்றன. அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஶிவாய விஜ்ஞாபநம்

ப்ராஞ்ஜலிர்பூத்வா ஸஹர்ஷா ஸஶ்ரத்தா விஜ்ஞாபயேத் :-

அத்ய த்வம் மதிஸ்வப்நஜாதாநாம் ஸம்ஸித்த்யர்த்தம் ஸமர்ப்பயே ।
அஜ்ஞாநேந ஜாதாநாம் த்ருஷ்டா த்வம் பரமேஶ்வர ॥
கர்மணா மநஸா வாசா க்ருத்வா நாநாத்யா மதிர்மம ।
மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் பக்திஹீநம் ச யத்க்ருதம் ॥
ஜபஹோமார்ச்சநாஹீநம் க்ருதம் நித்யம் மயா தவ ।
அக்ருதம் வாக்யஹீநம் ச தத்பூரய மஹேஶ்வர ॥
ஸம்பூர்த்த்யர்த்தம் ஸர்வேஶாந பவித்ரம் பாபநாஶநம் ।
த்வயா பவித்ரகம் ஸர்வம் ஜகத் ஸ்தாவரஜங்கமம் ॥
வர்ணிதம் யந்மயா தேவ வ்ரதம் வைகல்ப்யயோகத: ।
ஸகலம் பவது தத்ஸர்வம் தவாஜ்ஞாஸம்பத்-ஸம்ஹிதம் ॥

இதி விஜ்ஞாப்ய ॥

துண்டுதுண்டான நூல்களையெல்லாம் ஒன்றாக வைத்து, வேறொரு நூலினால் அவை அனைத்தையும் முடிந்து வைத்தால், அந்த வேறொரு நூலின் முடிப்புக்களின் காரணமாக, துண்டுதுண்டான நூல்களும் ஒரே நூலாக; ஒரே மாலையாகக் காட்சியளிக்கும். பவித்ரோத்ஸவ ஸமயத்தில் நாம் ஸமர்ப்பிக்கும் பவித்ர மாலையானது இது போலவே திகழ்கிறது. அதாவது துண்டு துண்டான பல நூல்கள் ஒன்றாக வைக்கப்பட்டு, வேறொரு நூலினால் பல இடங்களில் முடிக்கப்பட்டு, பல முடிப்புக்களுடன் கூடிய ஒரே பவித்ர மாலையாகத் திகழ்க்கிறது. எனவே பவித்ர மாலையில் துண்டு துண்டாக இருக்கும் நூல்களானவை, பல லோபங்களின் காரணமாக கண்டந் துண்டமாகக் கிடக்கும் ஒரு வருட பூஜாதி கர்மாக்களின் ஸூசகங்களாக = குறிப்புகளாகத் திகழ்கின்றன. அப்பவித்ர மாலையில் துண்டு துண்டான நூல்களை முடிந்து இணைக்கும் ஒரு பெரிய நூலானது, மேற்படி கண்டந்துண்டமாகக் கிடக்கும் ஒரு வருட பூஜாதி கர்மாக்களை ஒன்று சேர்க்கக் கூடியதான "பரமேஶ்வர ஆணை"யின் ஸூசகமாக = குறிப்பாகத் திகழ்கின்றன. எனவேதான் பதினெட்டு முடிச்சுகளிலும் ஶிவபெருமானின் வடிவாகிய ப்ராஸாத மந்த்ரத்தின் கலைகளைப் பூஜிக்கிறோம்.

இந்நூலில் சொல்லப்படாதவை . . . .

தேவானுஜ்ஞை, வாஸ்து ஶாந்தி, ம்ருத்ஸங்க்ரஹணம், அங்குரார்பணம் ரக்ஷாபந்தனம், ஸ்நபனம், உத்ஸவம் போன்றவையும் பவித்ர - விதியின் அங்கமாக ஆங்காங்கே சொல்லப்பட்டுள்ளன. ஸோமாஸ்கந்தோத்ஸவம் சில இடங்களில் நடைபெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- பிறகு தூபம், தீபம், ஆராத்ரிகம் (கற்பூர நீராஜநம்), தர்பணம், சத்ரம் போன்ற உபசாரங்களை ஸமர்ப்பித்தல்.
- ஶிவபெருமானானவர், அநந்தன் முதலியவர்களால் (வித்யேஶ்வராதிகள்) ஸ்துதிக்கப் பட்டவராயும், அதனால் சந்தோஷமடைந்தவராயும் பாவித்து, தேனு முத்ரையால் அமருதீகரணத்தையும், மஹாமுத்ரையால் பரமீகரணத்தையும் செய்தல்.
- மூல மந்த்ரத்தை ஜபம் செய்து, அதனை ஸமர்ப்பித்துவிட்டு, மூலமந்திரத்தின் பத்தில் ஒரு பங்காக ப்ரம்ஹாங்க மந்த்ரங்களையும் ஜபித்து ஶிவனிடம் ஸமர்பித்தல்.
- பிறகு ஆசார்யரானவர் அனைத்து தெய்வங்களுக்கும் பவித்ரங்களைச் சாற்றுதல்.
- ஸாதகாபிஷேகம் செய்து கொண்ட ஸாதகரானவர், மந்த்ர ஸித்தியின் பொருட்டு, தான் ஸாதிக்கக்கூடிய = ஜபிக்கக்கூடிய காம்ய மந்த்ரத்திற்கும் பவித்ரம் ஸமர்ப்பித்தல்.

வ்ரத நியமங்களை ஸ்வீகரித்தல்

- மேற்படி பவித்ரம் சாற்றுதலோடு, பவித்ரோத்ஸவத்தின் ப்ரதான கர்மாவானது நிறைவு பெறுகிறது. அன்று முதற்கொண்டு நியமங்களை அனுஷ்டிக்க வேண்டும். அதாவது ஆஷாட மாஸத்தின் சுக்ல பக்ஷத்தின் ஶயன ஏகாதசிக்குப் பின் ஆரம்பித்து, க்ருத்திகா மாஸத்தின் சுக்ல பக்ஷத்தின் உத்தான ஏகாதஶி வரையிலான நான்கு மாதங்களில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய வ்ரதம் 'சாதுர்மாஸ்ய வ்ரதம்'. ஶயன ஏகாதஶிக்குப் பிறகு தான் சாதுர்மாஸ்ய வ்ரதம் என்பதால் ஆஷாட மாஸ சுக்ல பக்ஷ அஷ்டமீயில் பவித்ர கர்மாவினைச் செய்யக் கூடாது. அது போலவே உத்தான ஏகாதஶீ வரை தான் சாதுர்மாஸ்ய வ்ரதம் என்பதால் அதற்குப் பிறகோ, க்ருத்திகா மாஸ ஶுக்ல பக்ஷ சதுர்தஶீ அன்றோ, பவித்ர கர்மாவினைச் செய்யக் கூடாது. எனவே ஆஷாட மாஸ சுக்ல பக்ஷ சதுர்தஶி முதற்கொண்டு, கார்த்திக மாஸ சுக்ல பக்ஷ ஏகாதஶி பர்யந்தமான ஸமயத்தில் மட்டுமே உசிதமான குறிப்பிட்ட ஏதோவொரு காலத்தில் பவித்ர கர்மாவினைச் செய்ய வேண்டும். இவ் வ்ரதத்தினை நான்கு மாதங்களோ, மூன்று மாதங்களோ, இரண்டு மாதங்களோ, ஒரு மாதமோ அரை மாதமோ, ஒரு வாரமோ, ஐந்து நாட்களோ, மூன்று நாட்களோ அல்லது ஒரு நாள் வரையிலோ, அனுஷ்டிக்கலாம். மேற்படி பக்ஷங்களுள் ஏதோவொரு பக்ஷத்தை குருவின் கட்டளைப்படியோ அல்லது தன் இஷ்டப்படியோ ஸ்வீகரித்து வ்ரத நியமங்களை கடைபிடிக்கலாம்.
- எத்தனை நாட்கள் வரை நாம் நியமங்களை கடைபிடிக்கிறோமோ, அத்தனை நாட்களிலும் ஶிவபெருமான் முதலிய தெய்வங்களுக்கு வ்ரதாங்க போகாங்க த்ரவ்யங்களை ஸமர்பித்தல், பவித்ரங்களை ஸமர்பித்தல் ஆகியவற்றை செய்ய வேண்டும்.
- முன்பு குறிப்பிட்டது போல, பஞ்ச கவ்யம், சரு, ஜலம், குங்குமப்பூ, தாம்பூலம் ஆகியவற்றைத் தவிர, பிற வ்ரதாங்க போகாங்க த்ரவ்யங்களைச் சுத்தப்படுத்தி, மறுபடியும் மறுபடியும் ஸமர்ப்பிக்கலாம். அதுபோலவே பவித்ரங்களையும் ஸம்ஸ்கரித்து மறுபடியும் மறுபடியும் ஸமர்ப்பிக்கலாம். மேற்படி பஞ்சகவ்யம் முதலியவற்றை ப்ரதிகாலம் புதிதாகவே ஸமர்பிக்க வேண்டும்.
- தற்போது பல ஆலயங்களில் நான்கு காலங்கள் பவித்ரோத்ஸவம் அனுஷ்டிப்பது காணப்படுகிறது. மேலே சொன்ன காலநியமங்களை வைத்துப் பார்த்தால், முதல் காலத்தினை அதிவாஸ யாகமாகவும், இரண்டாம் காலத்தினை ப்ரதான பவித்ர காலமாகவும், மூன்றாம் காலத்தினையும், நான்காம் காலத்தினையும், ஒரு நாள் மட்டும் நியமத்தினை ஸ்வீகரிக்கும் பக்ஷத்தின் காலங்களாகவும், அதுபோல் நான்காம் காலத்தினை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஜ்ஞாபநாநந்தரகரணீயவிதி:

ப்ரார்த்யைவ குருர்தேவ தர்பணத்ர த்ரவ்யாணி தக்ஷா, சந்தநாதிபி: ஸ்தோத்ரயாநம் ஸங்கல்பம் விதாய, சதுர்தீகரண பாரீகரணே விதாய, ஜப்த்வா, நிவேத்ய, ப்ராஹ்மணாநாம் தஶாம்ஶம் ஜப்த்வா நிவேதயேத் । ஆசார்ய: ஸபத்நீகைர்ஹ்ய: பவித்ரை: ஆஸ்நாபயேத், ஸாயம் ஸாயம்ஸந்த்யாவி தத்யாத் । ஆதர்ஶ்யாவஸாதிக்ரியா பர்யவஸாநாந்தம் *யதேஷ்டம் மார்கணா- ஸ்ரிஷ்டம் வா வ்ரதநியமம் மாஸ்ரீத்வா, ஏவம் ஸ்தோத்ரை: ஸ்தூத்வா, ப்ரணம்ய, க்ஷமாபயித்வா,

அவப்ருத யாக காலமாக பெரியோர்கள் அமைத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. காலப்போக்கில் இந்த ரஹஸ்யங்கள் மறந்து போகவே 'நான்கு கால யாகங்கள்' என்ற சொல்வழக்கு அதிகரிக்கவே, நான்கு காலங்களும் ஸமமான = ஒரே மாதிரியான காலங்கள் போன்று தோன்றிவிட்டன.

எனவே ஸப்தமியன்று துவங்கி நவமியன்று முடியும் பக்ஷத்தில் கூட, அஷ்டமியே ப்ரதான பவித்ர ஸமர்ப்பணத்திற்குரிய திதி என்று ஸித்தமாகிறது. அது போலவே த்ரயோதஶி அன்று துவங்கி பௌர்ணமியன்று முடியும் பக்ஷத்தில் கூட, சதுர்தஶியே ப்ரதான பவித்ர ஸமர்ப்பணத்திற்குரிய திதி என்று ஸித்தமாகிறது. எனவே தான் பவித்ர சதுர்தஶி என்று தர்ம ஶாஸ்த்ர க்ரந்தங்களிலும் ப்ரஸித்தமாயுள்ளது.

❁ ஆசார்யரானவர் (மழையினால்) ஈரமாயுள்ள பாதைகளை விடுத்து, தனக்கு இஷ்டமான ஒரு இடத்தினை அடைந்து, மண், விபூதி முதலிய வ்ரத போகாங்க த்ரவ்யங்களை சேகரித்தவராய், நியமங்களோடு கூட நான்கு மாதங்களை கழிக்க வேண்டும். பவித்ரத்தினை விஸர்ஜனம் செய்யாமல் வேறெங்கும் செல்லக்கூடாது. பவித்ரத்தினை விஸர்ஜனம் செய்து விட்டுத்தான் ; பவித்ரோத்ஸவத்தை முடித்துவிட்டுத் தான் தனக்கு பிடித்தமான எந்த இடத்திற்கும் செல்லலாம்.

\- ஶ்ரீமத் பௌஷ்கரம் மற்றும் ஶ்ரீமந் மோஹ ஶரோத்தரம் - ப்ரபா

❁ தர்ம ஶாஸ்த்ரங்களில் இந்த நான்கு மாதங்களிலும் பல்வேறு நியமங்கள் கூறப்பட்டிருப்பது இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

❁ 'பக்ஷா : வை மாஸா : ' என்ற நியமப்படி, வ்யாஸ பௌர்ணமி முதற்கொண்டு நான்கு பக்ஷங்களையே நான்கு மாதங்களாகக் கொண்டு, தற்போதைய ஸந்யாஸிகள் சாதுர்மாஸ்ய வ்ரதத்தினை அனுஷ்டிப்பதும் இங்கு நினைவு கூறத்தக்கது.

❁ 'யதேஷ்டம்'* என்று இருப்பதால், சில இடங்களில், ஒரே நாளில் காலை ஒரு வேளையிலேயே, ஸத்யோதிவாஸம், ப்ரதானபவித்ரதானம், நியமம், அவப்ருதம் ஆகிய அனைத்தினையும், அனுஷ்டித்து விடுகிறார்கள் போலும். இது அஶக்தி விஷயம்.

❁ ஸத்யோதிவாஸ பக்ஷத்தில் உள்ள விஶேஷத்தினை பக்கம் 58-59ல் பார்க்கவும்.

❁ இவ்வாறு யதாஶக்தி வ்ரத-நியமம் ஸ்வீகரித்துக் கொண்டு, இறைவனை, ஸ்தோத்ரங்களால் ஸ்துதித்து, வணங்கி, மன்னிப்பு வேண்டுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- குண்டத்தின் அருகினை அடைந்து, அக்னியில் உள்ள பகவானுக்கு பவித்ரங்கள் ஸமர்பித்தல்.
- பவித்ரவிதியில் ஏற்பட்ட குறைகளை நிறைசெய்யவும், நிறைவினை ஸ்திரப்படுத்தவும் வேண்டி, நூறுக்கும் மேற்பட்ட ஆஹுதிகளைக் கொடுத்தல்.
- பிறகு, சரு ஹோமம் (2ம் பாகத்தின் 2ம் பாகம்) செய்து ப்ராயச்சித்தத்தின் பொருட்டு மூலமந்திரத்தால் 100 .... ஆஹுதியைச் செய்தல்.
- நைவேத்யம் (2ம் பாகத்தின் 1ம் பாகம்), ஆசமனம், சந்தனம், தாம்பூலம் முதலியவற்றை நிவேதித்து, ஶிவனை, அக்னியிலேயே இருக்கும்படி நிரோதித்தல்.
- பூராதி 4 வ்யாஹ்ருதி ஹோமம் செய்து, ஶிவனுக்கு (ஶிவாக்னிக்கு) பவித்ரம் கொடுத்து, அக்னியையும் நிரோதனம் செய்து , 'ஓம் ஹாம் அக்னயே ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா' என்று ஸ்விஷ்டக்ருதாஹுதி செய்தல்.

பலிகொடுத்தல் - போன்றவை

- பரிதி - விஷ்டரங்களில் இருக்கும், ப்ரஹ்மாதிகளுக்கும், இந்த்ராதிகளுக்கும், பவித்ரத்தோடு சேர்த்து பலியுருண்டையைத் தந்து, அவர்களையும் நிரோதித்தல்.
- பவித்ரத்தோடு சேர்த்தே, அந்தர்பலியுருண்டையையும், பஹிர்-பலியுருண்டையையும் தந்துவிட்டு, 'ஸ்தோத்ர-வந்தனம்' செய்து, ஸகளீகரணம் செய்து கொள்ளுதல்.
- தனது குருவிற்கும், ஸித்தாந்த (ஶிவாகம) புஸ்தகங்களுக்கும் பவித்ரம் அளித்தல். {ஆசார்யருக்கு (குருவிற்கு) பஞ்ச ப்ரஹ்ம மந்த்ரங்களால் பவித்ரம் அளிக்க வேண்டும். - ஸ்ரீமத் ஸுப்ரபேதம் - ப்ரபா }
- மண்டலத்திலுள்ள ஶிவனைப் பூஜித்து, 'யத் க்ருதம் யத் . . .' என்று கர்ம நிவேதனம் செய்து மன்னிப்பு வேண்டுதல்.
- இஷ்ட (மூல) லிங்கத்திலுள்ள ஶிவனையும், கும்பத்திலுள்ள யாகேஶ்வரரையும் பூஜித்தல்.
- லோகபாலர்கள், யாகத்தினைக் காப்பாற்றுவதில் கவனத்துடன் இருப்பதாக பாவித்தல்.

ஸபையோர்களை கௌரவித்தல்

- ஶிவதீக்ஷை செய்து கொண்டவர்களை, போஜனம், சால்வை, வஸ்த்ரம், பணம் போன்றவற்றால் ஶக்திக்கேற்றவாறு கௌரவித்தல்.
- எளியோர், குருடர், தரித்ரர், அனாதை, குழந்தை, வயதானோர், மெலிந்தோர், நோயுற்றோர், ஆகியோரையும் மகிழ்வடையச் செய்தல்.
- 'இந்த தானத்தால் ஸதாஶிவப்பெருமான் மகிழக்கடவது ! ' என்று சொல்லுதல்.

போஜனம்

- தனது ஶிஷ்யர்களோடு, தானும், 3வது சரு-பாகத்தினை உண்ணுதல்.
- இத்துடன், ப்ரதானமான பவித்ர விதி நிறைவடைகிறது. பல காலங்களில் செய்வதானால் இதே முறையை ஒவ்வொரு காலமும் அனுஷ்டித்து கடைசி காலத்தில், இனி சொல்வது போலச் செய்ய வேண்டும்.

'ஒரு ஸூத்ரம்' என்பது ஒன்பது இழைகளைக்கொண்டது.

- ஸ்ரீமந்- ம்ருகேந்த்ரம்- ப்ரபா.

தங்கம்,வெள்ளி,தாம்ரம்,மரவுரி,கம்பளி, முஞ்சம்புல், சணல், பருத்தி, பட்டு, தர்ப்ப போன்றவற்றால் பவித்ரம் செய்யலாம்.

ஸ்ரீமத்-பூர்வ-காரணத்தில் பவித்ரத்திற்கு முஹூர்த்தமும் சொல்லப்பட்டுள்ளது.

63-65, 122 படலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌕𑌰𑍍𑌣𑌾𑌭𑌿𑌕𑌾𑌮𑌤𑌃, 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌹𑍃𑌦𑌯𑍇𑌨 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍, 𑌵𑌿𑌧𑌿𑌵𑌿𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌰𑍁𑌵𑌰𑍍𑌤𑌿 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌯 𑌶𑌤𑌾𑌧𑌿𑌕𑌂 𑌜𑍁𑌹𑍁𑌯𑌾𑌤𑍍 । 𑌤𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾, 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌅𑌘𑍋𑌰𑍇𑌣 𑌶𑌤𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾, 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯, 𑌨𑍈𑌵𑍇𑌦𑍍𑌯 𑌮𑍁𑌖𑌵𑌾𑌸 𑌚𑌨𑍍𑌦𑌨 𑌤𑌾𑌮𑍍𑌬𑍂𑌲𑌾𑌦𑍀𑌨𑌿 𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯, 𑌸𑍍𑌤𑌵𑌨𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯, 𑌶𑌿𑌵𑌵𑌹𑍍𑌨𑌿𑌂 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯, 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑍀𑌃 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾, 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾, 𑌨𑌿𑌰𑍋𑌧𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌸𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑍃𑌦𑌾𑌹𑍁𑌤𑌿𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾, ॥

𑌬𑌲𑌿𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌧𑌿𑌃

𑌪𑌰𑌿𑌧𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌰𑌸𑍍𑌥𑌸𑍍𑌯. 𑌸𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌬𑌲𑌿𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾, 𑌨𑌿𑌰𑍋𑌧𑍍𑌯, 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌬𑌲𑌿𑌂 𑌬𑌹𑌿𑌰𑍍𑌬𑌲𑌿𑌞𑍍𑌚 𑌸𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾, 𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌵𑌨𑍍𑌦𑌨-𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑌕𑌲𑍀𑌕𑍃𑌤𑍍𑌯, 𑌮𑌣𑍍𑌡𑌪𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾, 𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑍍𑌥𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, 𑌕𑌰𑍍𑌮 𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯, 𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾, 𑌅𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌥𑌂 𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑍍𑌥𑌞𑍍𑌚 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, 𑌦𑍍𑌵𑌾𑌰𑌪𑌾𑌲𑌾𑌨𑍍 𑌯𑌾𑌗𑌰𑌕𑍍𑌷𑌾𑌯𑍈 𑌸𑌾𑌵𑌧𑌾𑌨𑌾𑌨𑍍 𑌸𑌂𑌭𑌾𑌵𑍍𑌯, ॥

𑌸𑌦𑍍𑌯𑌸𑍍𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌧𑌿𑌃

𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 𑌭𑍋𑌜𑌨 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌨𑍍 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, 𑌦𑍀𑌨 𑌅𑌨𑍍𑌧 𑌕𑍃𑌪𑌣 𑌅𑌨𑌾𑌥 𑌬𑌾𑌲 𑌵𑍃𑌦𑍍𑌧 𑌕𑍃𑌶 𑌆𑌤𑍁𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑍍𑌯, 𑌅𑌨𑍍𑌨𑍇𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑍀𑌯𑌤𑌾𑌂 𑌮𑍇 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 ॥

𑌭𑍋𑌜𑌨𑌵𑌿𑌧𑌿𑌃

𑌤𑌤𑌃 𑌶𑌿𑌷𑍍𑌯𑍈𑌃 𑌸𑌹 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 ॥

ஸத்யோதிவாஸம் என்பது ....

ஸத்ய: = உடனடியாகச்செய்யும், அதிவாஸம் - ஸத்யோதிவாஸம். ப்ரதான-பவித்ரத்தினை என்றையதினம் ஸமர்பணம் செய்ய உள்ளோமோ, அதற்கு முன் தினங்களில் செய்யும் யாகமானது அதிவாஸயாகம் எனப்படும். அவ்வாறு முன்தினங்களில் அதிவாஸம் செய்யமுடியாத பக்ஷத்தில், அன்றையதினமே அதிவாஸத்தையும் சேர்த்துச் செய்து விடலாம். இதற்கு ஸத்யோதிவாஸ-பக்ஷம் என்று பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'நான்கு மாதங்கள்' முதலிய பக்ஷங்களை அனுஷ்டிக்க இயலாததால்,
ஒரு நாள் மட்டுமே 'பவித்ர விதி' செய்யும் பக்ஷத்தில்

மறுநாள் செய்ய வேண்டியவை.

- மறுநாள் காலை குளித்தல்.
- ஸந்த்யாவந்தனம் செய்தல்.
- ஶிவனிடமிருந்து பவித்ரங்களைக் களைதல்.
- முன்தினம் செய்தது போலவே, ஶுத்தபாத்ரத்தில் (சண்டேஶ்வரருக்காக) வைத்தல்.
- அஷ்டபுஷ்பம் சாற்றி, ஶிவனை (ஸாபேக்ஷ) விஸர்ஜனம் செய்தல்.
- காலை, மதியம் தொடர்பான இரண்டு நித்யாஹ்னிகங்களையும் முடித்தல்.
- நைமித்திக ஸந்த்யாவினைச் செய்தல்.
- முன்தினம் செய்தது போலவே, ஸூர்யபூஜை முதற்கொண்டு, ஶிவபூஜை வரை, அனைத்து பூஜைகளையும் செய்து முடித்தல்.
- அக்னியிலுள்ள ஶிவனையும் பூஜித்தல்.
- மந்த்ர-தர்பணம் செய்தல்.
- சருபாகம் செய்து, விபாகம் செய்து நிவேதித்தல்.
- முன்போலவே, ஸூர்யன் முதலிய அனைவருக்கும் பவித்ரங்களைச் சாற்றுதல்.
- ஶிவனுக்கும், வ்ரத-த்ரவ்ய - நிவேதந பூர்வமாக முன்போலவே பவித்ரங்களைச் சாற்றி, ஜபம் வரை அனைத்தையும் செய்தல்.
- அக்னியில் உள்ள ஶிவனையும் ஸந்தோஷித்து, சருநிவேதனம் செய்து, மூலமந்த்ரம் அல்லது அஸ்த்ர மந்த்ரம் அல்லது அகோர-மந்த்ரத்தால் 100 ஆஹுதி கொடுத்து, மஹா பூர்ணாஹுதியைச் செய்தல்.

கர்ம ஸமர்பண முறை

- போகத்தினை விரும்பும் பௌதிகனானவன், 'பகவானே! இந்த வ்ரதமானது பயனை ஸாதிக்கக்கூடியதாக எனக்கு அமைய வேண்டும்' என்று வேண்டி "ஓம் ஹாம் ஹௌம் ஶிவாய ஸ்வாஹா" என்று சொல்லி விஶேஷார்க்ய ஜலத்தினை உத்பவ முத்ரையால் ஶிவனின் வரத ஹஸ்தத்தில் ஸமர்ப்பிப்பதன் மூலம் வ்ரதத்தை ஸமர்ப்பித்தல்.
- மோக்ஷத்தினை விரும்பும் நைஷ்டிகனானவன், 'நாதனே! இந்த வ்ரத - கர்மாவானது, எனக்கு மோக்ஷத்தின் இடையூறாக அமைந்து விடக்கூடாது' என்று வேண்டுதல்.

யாகத்தினை விஸர்ஜனம் செய்யும் முறை

- அக்னியிலுள்ள ஶிவனுக்கு, நைவேத்யம், ஆசமனம், சந்தனம், தாம்பூலம் முதலியவற்றை கொடுத்து, ஹோம பஸ்மத்தை ஸ்வீகரித்துக் கொள்ளுதல்.
- அக்னியின் உள்ளே புகுந்து, ஶிவனை அஷ்ட புஷ்பங்களால் பூஜித்து, வணங்கி, பராங்முகார்க்யம் கொடுத்து, நாடியின் வழியாக அக்னியிலுள்ள பகவானை மண்டலத்தில் உள்ள ஶிவனோடு சேர்த்து விடுதல்.
- அக்னியிலுள்ள, ஸம்ஹிதா மந்த்ரங்கள் போன்றவற்றை ஸம்ஹாரமுத்ரையால் எடுத்துக் கொண்டு, தனது த்வாதஶாந்தம் வரை கொண்டு சென்று, மறுபடியும் கீழே கொணர்ந்து தனது ஹ்ருதயத்தில் சேர்த்துக் கொள்ளுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகாஹபக்ஷே த்³விதீயதி³நகரணீயவிதி⁴:

அபரேத்³யு: ஸ்நாத்வா, ஸந்த்⁴யாதி³ நிர்வர்த்ய, ஶிவாக்³ பவித்ராணி ஸம்ஹ்ருத்ய, பூர்வவிதி⁴நைவ ஶுத்³த⁴பாத்ரே நிதா⁴ய, அஷ்டபுஷ்பிகயா ஶிவம் ஸம்பூஜ்ய, விஸ்ருஜ்ய, நித்யாக்³நிகார்யம் நிர்வர்த்ய, நைமித்திகஸந்த்⁴யாபூர்வம் பூர்வவிதி⁴நைவ ஶிவஸூர்யபூஜாதி³ ஶிவபூஜாந்தம் கர்ம நிர்வர்த்ய, வஹ்நிஸ்த²ஶிவம் ஸம்பூஜ்ய, மந்த்ரதர்பணம் விதா⁴ய, சரும் விபாச்ய, ஸம்பாத்ய நிவேத்³ய, ஸூர்யாதீ³நாம் யதா²பூர்வம் பவித்ராணி ஸமர்ப்ய, ஶிவாய அபி த்³ரவ்யநிவேத³நபூர்வம் பூர்வவச்ச பவித்ராணி ஸமர்ப்ய, ஜபாந்தம் கர்ம நிர்வர்த்ய, வஹ்நிஸ்த²ஶிவம் ஸம்பூஜ்ய, சரும் நிவேத்³ய, ப்ராயஶ்சித்தார்த²ம் மூலேந வா அஸ்த்ரேண வா அகோ⁴ரேண வா ஶதம் ஹுத்வா, பூர்ணாம் விதா⁴ய ॥

கர்மஸமர்பணவிதி⁴:

பு⁴க்திகாமோ மமைதந் மமாஸ்து ப²லஸாத⁴கமிதி வத³ந் ஶிவாய ஸமர்பயேத் । முக்திகாமஸ்து கர்மேத³ம் மாஸ்து மே நாயம் ப³ந்த⁴கமிதி கர்ம நிவேத்³ய ॥

யாக³விஸர்ஜநக்ரம:

வஹ்நிஸ்தா²ய நைவேத்³யம் மூலேந த³த்வா தாம்பூ³லாதீ³நி த³த்வா, ஹஸ்தவந்த³நம் க்ருத்வா, வஹ்நௌ ப்ரவிஶ்ய, அஷ்டபுஷ்பார்சநம் க்ருத்வா, அர்க்⁴யம் த³த்வா, நாடீ³யோகே³ந வஹ்நிஸ்த²ம் ப⁴க³வந்தம் ஹ்ருத்பத்³மஸ்தே² ஶிவே ஸம்யோஜ்ய, வஹ்நே: மந்த்ராந் ஸம்ஹ்ருத்ய, ஆசமநம் த³த்வா, நிஷ்க்ராம்ய, ஸ்வஹ்ருதி³ ஸந்நிவேஶ்ய, வஹ்நிம் வ்யாஹ்ருதிபி⁴: ஸந்தர்ப்ய, தமபி விஸர்ஜயேத் ॥

அக்னியை விஸர்ஜனம் செய்தல்

- சண்டேஶ்வர பூஜை மற்றும் சண்டயாகம் முடித்து. பிறகும் ஶிவாக்னியை விஸர்ஜனம் செய்யலாம் அல்லது இப்போதே விஸர்ஜனம் செய்யலாம்.
- வ்யாஹ்ருதிகளால் ஹோமம் செய்து. ஶிவாக்னியை த்ருப்திப்படுத்தி ஶிவாக்னியை விஸர்ஜனம் செய்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(அல்லது சண்டேஶ்வர பூஜையின் முடிவில் ஶிவாக்னியையும் பூஜித்து யதாஶக்தி அவருக்கு ஹோமம் செய்து, அவரை விஸர்ஜனம் செய்தல்).

- அக்னி விஸர்ஜனம் ஆனபின்பு பரிதி - விஷ்டரங்களில் உள்ளவர்களுக்கு பலி கொடுத்து, அவர்களையும் விஸர்ஜனம் செய்தல்.
- அந்தர்பலி - பஹிர்பலி கொடுத்து, ஸ்தோத்ர - வந்தனம் செய்து, ஸகளீகரணம் செய்து கொள்ளுதல். (அக்னிவிஸர்ஜனம் செய்தால்தான் இதுவரை செய்யவேண்டும். விஸர்ஜனம் செய்யாத பக்ஷத்தில், இவற்றை இப்போது செய்யவேண்டாம். பிறகு செய்யலாம்).
- மண்டலத்திலுள்ள ஶிவனை, யாகேஶ்வர ஶிவனிடத்தில் சேர்த்தல்.
- யாகேஶ்வர ஶிவனின் ஸம்ஹிதாமந்த்ரங்கள் (ஆவரணம்) மற்றும் அஸ்த்ர வர்தனீயின் மந்த்ரங்கள் (ஆவரணம்) ஆகிய இரண்டினையும், யாகேஶ்வர ஶிவனிடத்தில் சேர்த்தல்.
- "பகவானே! யாகத்தின் முடிவினைக் குறிக்கும் வகையில் கடைசியில் செய்யும் அபிஷேகமாகிய 'அவப்ருத - ஸ்னானம்' வரை தாங்கள் இங்கேயே இருக்க வேண்டும்" என்று முதலில் யாகேஶ்வரரிடத்தில் விண்ணப்பித்த காரணத்தால், யாகேஶ்வரரை ஒரேயடியாக விஸர்ஜனம் செய்யாமல், 'மன்னித்தருள்வீராக' என்று கூறி, ஸாபேக்ஷமாக விஸர்ஜனம் செய்தல். இவ்வாறு ஸாபேக்ஷ விஸர்ஜனம் செய்வதால் ஶிவனின் ஸாமான்ய ஸன்னிதானம் அங்கு உள்ளது.
- பிறகு இஷ்ட (மூல) லிங்கத்திலுள்ள ஶிவனை, அஷ்டபுஷ்பிகையால் பூஜித்து, லிங்கத்திற்குத் தகுந்தாற்போல, ஸாபேக்ஷமாகவோ, நிரபேக்ஷமாகவோ (இஷ்ட லிங்கமானது, க்ஷணிகமானால் நிரபேக்ஷமாகவும், சர / ஸ்திர-லிங்கமானால் ஸாபேக்ஷமாகவும்), விஸர்ஜனம் செய்தல்.

ஶிவஸூர்யனை உசிதப்படி விஸர்ஜனம் செய்தல்.

- திக்பாலர், த்வாரபாலர், கணேஶர், குரு முதலியோரை பூஜாக்ரமத்தின் விபரீதக்ரமத்தில் நிரபேக்ஷமாய் விஸர்ஜனம் செய்தல்.

சண்டேஶரை பூஜித்து விஸர்ஜனம் செய்தல் - பூமியை ஶுத்தம் செய்தல்

- இஷ்ட (மூல) லிங்கத்திலுள்ள ஶிவனிடமிருந்து பவித்ரங்களைக் களைந்து கொள்ளுதல்.
- மண்டலத்திலோ (அர்த்த - சந்த்ர மண்டலம்) ஸ்தண்டிலத்திலோ (பரார்த்த - ஆலயத்தில் சண்டேஶ்வர விக்ரஹத்திலோ) சண்டேஶ்வரரை ஆராதித்தல்.
- ஶிவனைப்போலவே பவித்ரங்களை ஸமர்பித்தல்.
- ஏற்கனவே ஶுத்த பாத்ரத்தில் எடுத்து வைத்த நிர்மால்ய புஷ்பாதிகளையும், நிர்மால்ய பவித்ரத்தையும் சண்டேஶ்வரருக்கு ஸமர்பித்து விஜ்ஞாபனம் செய்தல்:-

விஜ்ஞாபனத்தின் பொருள்

- 'ஹே சண்டநாதரே! குறையுடனோ அல்லது அதிகப்பாட்டுடனோ! வார்ஷிக கர்மாவாகிய எந்தவொரு 'பவித்ரகர்ம' என்னால் அனுஷ்டிக்கப்பட்டதோ, அது உங்களது ஆணையால் பரிபூர்ணமாக நிறைவுடையதாக ஆகட்டும்'.
- பிறகு சண்டேஶரை ஸ்துதித்தல்.
- அக்னியில் சண்டேஶ்வரரை ஆராதித்து, 100 ஆஹுதியளித்து, குண்டம், ஸ்தண்டிலம் / மண்டலம் ஆகிய இரண்டிலிருந்தும் சண்டேஶரை விஸர்ஜனம் செய்தல்.
- பாழ்கிணறு போன்றவற்றில் நிர்மால்யம் போன்றவற்றை விஸர்ஜித்து, பவித்ரங்களை அக்னியில் தஹித்து விடுதல்.
- வ்யாஹ்ருதி ஹோமம் செய்து, அக்னியையும் ப்ரஹ்மாதிகளையும் விஜர்ஜனம் செய்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

𑌯𑌥𑌾 𑌚𑌣𑍍𑌡𑌪𑍂𑌜𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍। [illegible] [illegible] [illegible] 𑌬𑌲𑌿𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, [illegible] 𑌬𑌲𑌿𑌨𑍍𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, [illegible] 𑌸𑌕𑌲𑍀𑌕𑍃𑌤𑍍𑌯, [illegible] 𑌸𑌂𑌯𑍋𑌜𑍍𑌯, [illegible] (𑌨𑍍𑌯𑌾𑌃?) [illegible] 𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯, [illegible] 𑌸𑌂𑌯𑍋𑌜𑍍𑌯, 𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 [illegible] 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 । 𑌤𑌤𑍋 [illegible] 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯, [illegible] 𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌵𑌾 𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯, [illegible] 𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌂 𑌵𑌿𑌸𑍃𑌜𑍇𑌤𑍍 । 𑌤𑌤𑍋 [illegible] [illegible] 𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯,॥

𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑌪𑍂𑌜𑌾𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨[illegible]𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃

[illegible] 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌯𑌥𑌾 [illegible] [illegible], 𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯, 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 [illegible], 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌲𑍍𑌯𑌂 𑌸𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌤𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑍇𑌤𑍍

𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍍[illegible] 𑌕𑍃𑌤𑌂 𑌨𑍍𑌯𑍂𑌨𑌾𑌧𑌿𑌕𑌂 𑌮𑌯𑌾 ।

𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌮𑍇 𑌚𑌣𑍍𑌡𑌨𑌾𑌥 𑌤𑌵𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 ॥ 𑌇𑌤𑌿

𑌤𑌦𑌨𑍁 [illegible] 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾, [illegible] [illegible], 𑌶𑌤𑌂 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾, 𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯, [illegible] 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌲𑍍𑌯𑌂 [illegible], 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 । 𑌤𑌤𑍋 [illegible] [illegible] 𑌸𑌂𑌯𑍋𑌜𑍍𑌯, [illegible], 𑌸𑌕𑌲𑍀𑌕𑍃𑌤𑍍𑌯, [illegible] 𑌶𑌿𑌵𑌂 𑌸𑌂𑌸𑍍𑌨𑌾𑌪𑍍𑌯, 𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

(முன்பு சொன்ன பலி போன்றவற்றைச் செய்ய வேண்டும்.)

⊛ பூமியை பசுஞ்சாணத்தால் ஶுத்தம் செய்து. ஆசமனம். மற்றும் ஸகளீகரணம் செய்து கொள்ளுதல்.

⊛ பவித்ராரோபணத்தின் போது பர்யுஷித (பழைய) புஷ்பம் போன்றவற்றால். தனது இஷ்ட (மூல) லிங்கத்திலுள்ள ஶிவனுக்கு ஸம்பந்தம் ஏற்பட்டிருக்கும் என்பதால். அந்த நிர்மால்யத்தினை ஶுத்தம் செய்வதற்காக இஷ்டலிங்கத்தினை அபிஷேகித்து பூஜித்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸத்யோதிவாஸ பக்ஷத்தில் செய்முறைகள்

- மண்டபத்தில் பூஜிக்கப்பட்ட ஸூர்யனைமுதற்கொண்ட அனைவருக்கும் முன்பு சொன்ன அனைத்தினையும் செய்தல்.
- கந்தபவித்ரம் சாற்றிவிட்டு, உடனேயே ஶூத்த-பவித்ரமாகிய ப்ரதான, பவித்ரத்தினைச் சாற்றுதல்.
- இஷ்ட (மூல)லிங்கத்திற்கும், கந்த பவித்ரம் சாற்றிய பின்பு அஷ்டபுஷ்பம் சாற்றி, ஶூத்த பவித்ரங்களைச் சாற்றுதல்.
- அக்னியிலேயும் கந்த-பவித்ரம், ஶூத்த பவித்ரம் ஆகிய இரண்டினையும் சாற்றி, பிறவற்றை முன்போலவே செய்து, முன் சொன்னபடியே யாகத்தினை விஸர்ஜனம் செய்தல்.
- ஶூத்திக்காக பஞ்சகவ்யம் ப்ராஶனம்செய்தல்.

குருபூஜாக்ரமம்

- ஶிவபெருமானைப் போலவே, வஸ்த்ரம், ஸம்பாவனை, ஆபரணங்கள் ஆகியவற்றால் குருவினையும் பூஜித்தல்.
- குருநாதர் ஸந்தோஷமடைந்தால், ஶங்கரரும் ஸந்தோஷமடைவார். யாருடைய குருவானவர் மகிழ்வடைந்துள்ளாரோ, அவருடைய ஒருவருடக்ரியா ஸமூஹங்கள் அனைத்துமே (கர்மாக்கள்) பூரணமாகின்றன என்று பரமேஶ்வரர் கூறுகிறார்.

குருவின் ஸந்நிதியில் பவித்ரகர்ம

- ஐந்துயோஜனை தூரத்தில் இருந்தாலும், ஒரு ஶிஷ்யன் குருவின் ஸந்நிதியிலேயே பவித்ர கர்மாவினைச் செய்யவேண்டும்.

குருவின் ஸந்நிதியில் இல்லாத போது

- குருவின் ஸந்நிதியிலிருந்து ஐந்து யோஜனைக்கும் அதிகப்படியான தூரத்தில் இருந்தாலோ, முடியாதவனாய் இருந்தாலோ, ஶிஷ்யனானவன் மூத்தவர்களுடனோ அல்லது தனது ஸந்தானத்தைச் சேர்ந்தவர்களுடனோ பவித்ரகர்மாவினைச் செய்யவேண்டும்.
- யாருமில்லாத பக்ஷத்தில் தான் மட்டுமே பவித்ரவிதியைச் செய்து கொள்ளலாம்.
- பரமேஶ்வரன் என்ற மறுபெயரால் உலகில் அழைக்கப்படுகின்ற ஸ்ரீமத் அகோரஶிவ குருவினால் பவித்ரவிதி கூறப்பட்டது.

பரமேஶ்வரன் என்ற வேறு பெயரினைக் கொண்ட
ஸ்ரீமத் அகோர ஶிவாசார்யாரால் எழுதப்பட்ட
க்ரியா க்ரம த்யோதிகாவில்
பவித்ராரோபண விதி
இவ்வாறு முற்றுப்பெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

सन्ध्याधिवासे कर्तव्यक्रमः

[illegible]

पञ्चगव्यप्राशनविधिः

ततः शुद्ध्यर्थं पञ्चगव्यं प्राशयेत् ॥

गुरुपूजाविधिः

गुरुश्शिव इवाभ्यर्च्य वस्त्रवित्तविभूषणैः ।
तुष्टेन गुरुणानेन तुष्टो भवति शङ्करः ॥
सफलं सकलं तस्य क्रियाकाण्डादि वार्षिकम् ।
यस्य तुष्टो गुरुः [illegible] परमेश्वरः ॥

पवित्रकरणस्य गुरुदक्षिणा कर्तव्या

पञ्चयोजनसंख्यापि शिष्यः पवित्रं गुरुदक्षिणां निवर्तयेत् ॥

गुरुदक्षिणाभावे पवित्रकरणप्रकारः

ततः परं [illegible] स्वसाङ्गानि [illegible] निवर्तयेत् । तदभावे स्वयमेव निवर्तयेत् ॥

परमेश्वरापरा[illegible] जगति यो गुरुः ।
तेनाघोरशिवाख्येन पवित्रविधिरीरितः ॥

इति परमेश्वरापरनामधेय श्रीमदघोरशिवाचार्य
विरचितायां क्रियाक्रमद्योतिकायां
पवित्रारोपणविधिस्समाप्तः ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பவித்ர வகை அட்டவணை

<table>
<tr><th>ப்ரமாண நூல்</th><th>குறிப்பு</th><th>பவித்ர வகை</th><th colspan="4">பவித்ரநூல்களின் எண்ணிக்கை</th><th>முடிச்சுகளின் எண்ணிக்கை</th><th>முடிச்சிற்கும் முடிச்சிற்கும் இடைவெளி</th><th>உயரம் / அகலம்</th><th>பவித்ரத்தின் உருவ அமைப்பு</th></tr>
<tr><td rowspan="2">ப்ரபா</td><td rowspan="2"></td><td>தத்வ பவித்ரம்-3</td><td colspan="4">108 முதலியன</td><td>3 தத்வ பவித்ரங்களுக்கும் தலா 10 முடிச்சு</td><td>ஸமமான இடைவெளி</td><td>4 அங்குலம் அல்லது லிங்கத்தின் தலையளவு</td><td>கங்கணம்</td></tr>
<tr><td>கங்காவதாரம்-1</td><td colspan="4"></td><td>18 முடிச்சு</td><td></td><td></td><td>கங்கணம்</td></tr>
<tr><td>ஸ்ரீமச் - சித்த்ய விஸ்வஸாதாக்யம்</td><td></td><td>மூன்று தத்வ பவித்ரங்கள்</td><td colspan="4">108/54/10/7</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>ஸ்ரீமத் - ம்ருகேந்த்ரம்</td><td></td><td></td><td colspan="4">9 (1 நூல் 9 இழைகளைக்கொண்டது)</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td rowspan="6">ஸ்ரீமத் - மகுடம்</td><td rowspan="4"></td><td rowspan="4">தத்வ பவித்ரங்கள்
சலபேரத்திற்கு</td><td></td><td>உத்தமம்</td><td>மத்யமம்</td><td>அதமம்</td><td rowspan="4">உத்தமம் 10
மத்யமம் 10
அதமம் 10</td><td rowspan="4">ஸமமான இடைவெளி</td><td rowspan="4">உத்தமம் - 12 அங்குலம்
மத்யமம் - 8 அங்குலம்
அதமம் - 4 அங்குலம்</td><td rowspan="4">கங்கணம்</td></tr>
<tr><td>உத்தமத்தில்</td><td>90</td><td>70</td><td>50</td></tr>
<tr><td>மத்யமத்தில்</td><td>36</td><td>32</td><td>25</td></tr>
<tr><td>அதமத்தில்</td><td>20</td><td>16</td><td>09</td></tr>
<tr><td>சலபேரம்</td><td></td><td colspan="4"></td><td></td><td></td><td>தோள் உயரம்/
யதா ஸோபம்</td><td></td></tr>
<tr><td></td><td>கங்காவதாரம் என்ற ஸக்தி ஸூத்ரம்</td><td colspan="4"></td><td></td><td>இருமுனைகளில் இரு முடிச்சு, தலா இரண்டு அங்குல இடைவெளியில் 4 முடிச்சுகள், 1தாளம் இடைவெளி விட்டு மறுபடியும் 4 முடிச்சுகள், இதேபோன்று மற்றொரு பக்கமும் நான்கு நான்கு முடிச்சுகள்.</td><td></td><td></td></tr>
<tr><td rowspan="2">ஸ்ரீமத் ஞான ரத்னாவளி</td><td>க்ரஹங்கள்
லோகபாலகர்கள்
லக்ஷ்மீ ஆவரணங்கள்
த்வாரங்கள்
த்வாரபாலகர்கள்</td><td>சந்த பவித்ரம்</td><td colspan="4">8</td><td>1</td><td></td><td>4 அங்குலம்</td><td></td></tr>
<tr><td>தனக்கும் குருவிற்கும்</td><td>சந்த பவித்ரம்</td><td colspan="4">9(9 இழைகள் கொண்டவை)</td><td>1</td><td></td><td>12 அங்குலம்/
அளவற்றது.</td><td></td></tr>
</table>

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்.	பிழை திருத்தம்
14	ஸௌமிகூழ
65	அதிஷ்டாதாவாக உள்ள சிவபெருமானை
68	ஸாதகாபிஷேகம்
70	100 ஆஹுதியைக் கொடுத்து மஹாபூர்ணாஹுதியைச் செய்தல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்திரைகள்

ஸந்நிதான முத்ரை

ஸந்நிரோதன முத்ரை

அவகுண்டன முத்ரை

பஞ்சமுகீ முத்ரை

மனோரத முத்ரை

த்ரிஶூல (ஶூல) முத்ரை

ஸ்ருக் முத்ரை

மகரமுத்ரை

ம்ருகீ முத்ரை

உத்பவ முத்ரை


நாராச முத்ரை


திவ்ய முத்ரை

ஶங்க முத்ரை

கும்பக முத்ரை

லிங்க முத்ரை



பவித்ரோத்ஸவத்தில் வ்ரதாங்க-போகாங்க ஸமர்ப்பணம்

த்ரவ்யங்கள், ஸ்தானங்கள், மந்த்ரங்கள்

9. அகரு - ஶிகா	3. மண் - ஸத்யோஜாதம் 14. ஹோம த்ரவ்யங்கள் - ஸத்யோஜாதம் (தர்பை, எள், நெய் முதலியவை)	10. சந்தனம் - கவசம் 11. அகரு - கவசம் 12. கற்பூரம் --கவசம் 13. குங்குமம் - கவசம்
2. விபூதி - அகோரம் 15. தண்டம் - அகோரம் 16. அக்ஷஸூத்ரம் - அகோரம் 17. கௌபீனம் - அகோரம் 18. பிக்ஷாபாத்ரம் - அகோரம்		4. நெல்லிக்காய் -- வாமதேவம் 5. ஜலம் -- வாமதேவம் 19. மை -- வாமதேவம் 20. குங்குமம் -- வாமதேவம் 21. எண்ணை -- வாமதேவம் 22. குச்சி -- வாமதேவம் (பல், காது, நகம் போன்றவற்றை தூய்மை செய்ய) 23. சீப்பு - வாமதேவம் 24. தாம்பூலம் - வாமதேவம் 25. கண்ணாடி - வாமதேவம் 26. கோரோசனம் முதலியன - வாமதேவம்
8. கோரோசனம் - ஹ்ருதயம்	1. பல்குச்சி -- தத்புருஷம் 32. சரு -- தத்புருஷம் 33. நெய் -- தத்புருஷம் 34. முகவாஸம்-முதலியன -- தத்புருஷம்	6. பஞ்சகவ்யம் --ஈஶானம் 7. புஷ்பங்கள் - மூலம்/ஶிர: 27. ஆஸனம் --ஈஶானம் 28. பாதுகா --ஈஶானம் 29. பாத்ரம் (பாதுகா பீடம்) --ஈஶானம் 30. யோகபட்டம் --ஈஶானம் 31. குடை --ஈஶானம்

கிழக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy